


| மாலை 7 | April & May 1942, சித்திரபானுஷு சித்திரை-வைகாசி | முத்து 4-5 |
|---|---|---|


# பொருள் அடக்கம்.


| | | |
|---|---|---|
| போகிற போக்கில் | 146 | |
| ராஜாஜியின் புதுப் பிரசாரம் | 147 | கா. சி. வேங்கடரமணி. |
| இந்தியாவிற்கோர் இலவச கலாசாலை | 149 | டாக்டர் A. நரஸிங்க ராவ் M. A., L. T., D. SC., F. A. SC. |
| வெள்ளிவிழாக் கொண்டாட்டம் | 154 | கா. வே. ஸ்ரீனிவாஸன். |
| அரிசி | 159 | ஆ. வே. ஜெயராமன். |
| தென்னிந்திய பிரமுகர்கள் | 165 | வே ரா. சுந்தரராமன், எம். ஏ. |
| விஞ்ஞானமும் சமூகவியலும் | 170 | த. பு. நவநீதகிருஷ்ணன். |
| மூவர் | 173 | மோ. க. ஸ்ரீனிவாஸன், M. A., B. L. |
| ஓர் புதிய பாஸ நாடகம் | 178 | ய. மகாலிங்க சாஸ்திரி, M. A., B. L. |
| உன்னைப் பிரியேன் | 182 | பேரன். |
| இந்தியப் பொருளாதாரமும் காந்தியின் வழியும் | 184 | ஜே ஜே. அன்ஜேரியா. |
| சிறுவர் பகுதி | 187 | ஸி. ஆண்டி |
| உதிர்ந்த மணிகள் | 190 | |
| புஸ்தக விமர்ஸனம் | 191 | |



ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி.


காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

வருஷச் சந்தா: உள்நாடு ரூ. 3. வெளிநாடு ரூ. 5.



"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# போகிற போக்கில்



நான் எதிர்பாராத ஒரு பாக்கியம் பாரதமணிக்கு சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது. பாரதமணி பத்திரிகையை நான் துடங்கியபொழுது, கொஞ்சகாலம் அதை சென்னையில் நடத்தி, பிறகு காவேரி தீரத்திற்கு மாற்றவேண்டுமென்ற அவா கொண்டு இருக்கிறேனென்று 'போகிற போக்கில்' எழுதியிருந்தேன். சென்னையை பாரதமணிக்கு ஒரு தாத்தங்கால்போல் பாவித்தேன். ஏனென்றால் பத்திரிகைகளின் வளத்திற்கு கொஞ்சமாவது நகரவாழ்க்கையின் ஊட்டம் இன்றியமையாதது என்கிற ஒரு நினைப்பு எங்கும் நிரம்பியிருக்கிறது— அதுவும் கூவத்தின் ஊட்டத்தின் மகிமையைப்பற்றி கேட்கவும் வேண்டுமா?

இதுவரையில் பலகாரணங்களால் அந்த எண்ணத்தை நிறைவேற்ற முடியவில்லை. ஆனால் இப்பொழுது ஜப்பான் தொடர்ந்த மின்னல் யுத்தத்தால் சென்னைக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியால் நான் எதிர்பாராதபடி என் எண்ணம் நிறைவேறியிருக்கிறது. என் கனவும், நினைவும் ஈடேறிவிட்டது.

இந்த மாதம் முதற்கொண்டு மாயவரத்திலிருந்து பாரதமணி வெளிவரும். இனிமேல் கிராம வாழ்க்கைக்கும், முன்னேற்றத்திற்கும் பாரதமணி உண்மையான தொண்டுபுரிய இடம் கொடுக்குமென்றே நம்புகிறேன். அதற்கு மறுபடியும் நண்பர்களின் ஆதரவை வேண்டுகிறேன்.

* * * *

ஒரு பத்திரிகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதென்பது, புஷ்பச்செடியை ஒருஇடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றுவதுபோல் ஒரு நுட்பமான வேலை. சல்லிவேர்கூட விடாமல், அறுகாமல், ஒட்டி நிற்கும் மண் நழுவாமல் மாற்றவேண்டியிருக்கிறது. அதுபோல 'போகிற போக்கில்' எழுதும் பென்ஸிலும், அதைக் கூராகச்சீவும் கத்தியும் கூட தட்டுக்கிட்டுப் போகாமல், இந்த யுத்த நெருக்கடியில் கொண்டுவந்து சேர்க்க வேண்டியதாயிருக்கிறது. மாயவரம் கடையில் வாங்கிய 'புதுப்பென்ஸிலா'ல் 'போகிறபோக்கில்' எழுதமுடியுமா? திராக்ஷை ரஸத்தை மதுவாக மாற்ற பழகிய பானைதானே ஏற்றது! கவிதையும் திராக்ஷை ரஸம்போல பழைய பாண்டங்களில் பிறந்த உத்தமப்பிறப்பு. இல்லாவிட்டால் சுவை எப்படி ஏற்படும்? ருசி ஏது?

(தொடர்ச்சி 148-ம் பக்கம் பார்க்க.)

# ராஜாஜீயின் புதுப் பிரசாரம்.

கா. சி. வேங்கடரமணி.

ராஜாஜீயின் புதுப்பிரசாரபீதி ஜப்பான் பீதியைத் தோற்கடித்துவிட்டது. என் உள்ளத்தில் ஓர் பெரிய எக்கத்தையும், எமாற்றத்தையும் உண்டாக்கியிருக்கிறது. ராஜாஜீயின் புதுப்பிரசாரமும், அதை இந்த நெருக்கடியில் செய்யும் முறையும் தேசத்திற்கே ஒரு பாக்கியக் குறைவுதான்.

இந்த உயர்தர தேசபக்தர், கூர்மையான புத்தியுள்ள தலைவர், முப்பது வருஷ தேசசேவைக்குப் பிறகு நமது அரசியலில் ஒரு நெருக்கடியான சமயத்தில் குறுக்குவழி பாய்ந்து ஒரு நரிக்குழியை பறிப்பதற்கு என்ன காரணம்? முப்பது வருஷத்திய தபஸை கலைத்து விளைக்கிய மோஹினி எது என்று தெரியவில்லை; பாகிஸ்தான் மோஹினியா? பதவி மோஹினியா? அல்ல; ஒரு பேரில்லாத மோஹினி அது. அதை ஆங்கிலத்தில் 'சைகலாஜிகல்' '(Psychological)' மோஹினி என்று சொல்லுவார்கள். இது முக்கியமாகப் பெரியோர்களையும், அரசியல் தலைவர்களையும் அண்டி கொஞ்ச காலம் புத்தியைப்போக்கி உபத்திரவம் செய்யும் மோஹினி. இது ஓய்வற்றுக் கத்தும்; கண்ணீர்விட்டு அழும்; கண்ட சாமான்களை எல்லாம் இரண்டாக உடைக்கும். ஆனால் நாம் பயப்படவேண்டியதில்லை. நோய் தீரும்..

முப்பது வருஷம் தபஸ் செய்தும், ஈச்வர சானித்யம், ஸ்வராஜ்யம் கிட்டும் வழியையும்கூட காணமுடியவில்லையே என்ற எக்கம்தான் ராஜாஜீக்கு. இது தானாகவே விலகுமென்று நம்புகிறேன்.

இந்தப் புதுப்பிரசாரத்தினால் தீரும் பிரச்னைகள் ஒன்றும் இல்லை. கிளம்பும் பூதங்கள்தான் பல. கிணறு வெட்ட நீர் இல்லை; பூதங்கள் புரப்பட்டன. பாகிஸ்தான் மூலம் நமக்கு ஒருநாளும் தேசிய அரசாட்சி கிடைக்காது; சுதந்திரமும் கிடைக்காது. இந்து-முஸ்லீம் ஒற்றுமையால் மட்டும் நமது காரியப் வெற்றியடையாது. பாகிஸ்தான் என்பது தேசிய அரசாட்சி என்பதற்கே ஓர் முரண்பாடான கொள்கை பிளவையே ஆதரித்து நிற்கும் கொள்கை. பிறகு ஒருவிதத்திலும் ஒன்றுசேர்க்க முடியாது. முறுக்கிய கயற்றைப் பிரித்துவிட்டால், அது பழைய மட்டகாராகக் கூட தேறாது. மறுபடியும் சேர்த்து முறுக்கினாலும் கயிறாகவும் ஆகாது. பிரித்த கயிறுதான் பாகிஸ்தான்.

உண்மையில் பாகிஸ்தான், குயவன் சக்கரத்தில் வைத்து உருவாக்கக்கூடிய மண் அல்ல. பாகிஸ்தான் ஓர் காற்று-பிசாசு. கண்ணுக்குத் தெரியாது; கைக்கு அகப்படாது. அதற்கு தாடியும் கிடையாது, உச்சுக்குடுமியும் கிடையாது. மந்திரத்திற்கும் அடங்காது. தந்திரத்திற்கும் அடங்காது. ராஜாஜீயின் கையில் பிடிபடாது. அவர் கையிலிருக்கும் ஒருசாண் மாகாண மந்திரக்கோலையும் முறித்துவிட்டு, வாய்க்காலின் அக்கரையிலுள்ள மாமரத்து உச்சிக்கிளையிலேறி இலையோடு இலையாய் பதிங்கிவிடும்.

தவிர, பாகிஸ்தான் இமயமலையைச் சார்ந்து நிற்கும் ஓர் ப்ரும்ம ராக்ஷஸ்; தமிழ் மந்திரவாதியின் கையில் கட்டுப்படும் சில்லரைப் பிசாசு அல்ல. இந்த பாகிஸ்தான் ப்ரும்மராக்ஷஸிற்கு சொற்ப வயதுதான். அதைஏவி விட்டவன் வயதுதான் அதற்கு உண்டு. இந்த அன்னியன் விலக இதுவும் விலகிவிடும். இதையும் ராஜாஜீ அறிவார். ஆனால் ஆக்கப்

பொறுத்தவனுக்கு அறப் பொறுக்க வில்லை.

அரசியல் வாதிக்கு எப்பொழுதுமுள்ள 'தான்' என்கிற பிடிவாதம்தான் ராஜாஜீயின் இந்தப்புதுப்பிரசார பிடிவாதத்திற்குக் காரணம். அதுவும் பேர்போன மந்திரவாதியென்றால் கேழ்க்கவேண்டுமா? இந்த மந்திரவாதியை மறுபடியும் நாம் கையாள நாமும் கொஞ்சம் பொறுக்கவேண்டும்.

ஆகையால் நான் ராஜாஜீயை வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த புதுப்பிரசாரத்தை நிறுத்தி, ஒருமாதம் மௌன விரதம்கொண்டு பழைய சாந்தத்தையும், பெருமையையும், மாசற்ற சேவையையும் பெறவேண்டும்.

---

(146-ம் பக்கத்தொடர்ச்சி.)

தவிர வழக்கமாய் எழுதும் மேஜைகளும், நாற்காலிகளும் இந்த ரயில் நெருக்கடியில் 'கூட்ஸி'ல், அம்மிக்கல் குழவியுடன் சேர்ந்தும் கால் ஒடியாமல் வந்துசேரவேண்டியதாயிருக்கிறது.

இதைவிட சிரமமான கார்யம் மற்றொன்றும் உண்டு. ஜில்லா மாஜிஸ்ட்ரேட்முன் புது 'டிக்ளரேஷன்' ஆகவேண்டி யிருக்கிறது—கர்ணம் முதல் கலெக்டர்வரை 'பேப்பர்கள்' ஏணி ஏறி வெற்றியடைய வேண்டியிருக்கிறது.

இந்தப் பல காரணங்களைக் கொண்டு சித்திரை—வைகாசி மலர்கள் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து பிரசுரம் செய்ய வேண்டியதாயிற்று. இவ்வித இரட்டைப்பிறப்பு இனிமேல் பாரதமணிக்கு நேராதென்று நம்புகிறேன். மாதாமாதம் வெளிவரும். இப்பொழுது கூவத்தை விட்டு விலகி காவேரி தீரத்திற்கு வந்த பிறகு பாரதமணி ஆலைபோல் செழித்தோங்கி பலருக்கு இன்பமான நிழல் கொடுத்து வளரவேண்டுமென்று நான் ஈசனைப் பிரார்த்திக்கிறேன்.

—மணி.



# இந்தியாவிற்கோர் இலவச கலாசாலை.*

ஆங்கிலத்தில் எழுதியவர்:—
டாக்டர் A. நரஸிங்கராவ், M.A., L.T., D. Sc., F. A. Sc.

மொழிபெயர்த்தவர்:—
K. ரெங்கஸ்வாமி அய்யர், M.A., M.Sc.

மிகவும் சமீபகாலத்தில், அதாவது சுமார் பத்துலக்ஷம் ஆண்டுகளுக்கு முன்புதான், மனிதன் பூமியில் முதன் முதலாகத் தோன்றினனென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பூமியின் ஜீவிய சரித்திரத்தை, இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் பொருத்திப்பார்த்தால் நடுநிசியிலிருந்து மறு நடுப்பகல் பன்னிரண்டுமணி நேரத்தில் ஜீவனெதுவும் பூமியில் இருந்ததாகத் தெரியவில்லை; பிற்பகல் ஏழுமணிக்கு மீன்களும் மற்றும் இருதன்மையுள்ள ஜந்துக்களும் சமுத்திரங்களில் வாசஞ்செய்கின்றன; எட்டுமணிக்கு பெரிய ஊரும் ஜந்துக்கள் பூமியில் தலைமை பெற்று விளங்குகின்றன. மனிதனைப் போல் தாய்ப்பாலுண்ணும் ஜந்துக்கள் இரவு பத்துமணிக்குத்தான் தோன்றுகின்றன; ஆனால் குரங்கினத்தினின்றும் முற்றிலும் மாறுபடாத மனிதனோ இருபத்திமூன்றுமணி ஐம்பத்தொன்பது நிமிஷத்திற்கே அரைமனதுடன் பூமியை எட்டிப்பார்க்கிறான் சுமார் நாகரீககால முதல் தற்காலம்வரை நமக்குத்தெரிந்திருக்கும் பூமியின் பதினாயிர வருஷத்திய ஜீவிய சரித்திரமும் இக்கணக்கின்படி அரைநொடிப் பொழுதுக்கே பொருந்தும்.

அப்படி யிருந்தும், இந்த குறைந்த காலத்திற்குள், மனிதன், பூமி, கடல், ஆகாயம் இவைகளில் ஆதிக்கம் வகிக்கக்கூடிய சமூக நிலைமையை அமைத்துக்கொண்டது (இந்த நிலைமை சமீப கால நிகழ்ச்சிகளிலிருந்து அபாயத்துக்கிடமான நிலையில்லாத் தன்மையுடையதாயினும்) அவனுடைய சிந்தனை சக்தியும், சமூக ஆரம்பத்திலேயே அவனுடைய சூக்ஷ்மபுத்தியால் கண்டுபிடிக்கப்பட்ட **பேச்சு, எழுத்து** என்ற மற்றும் இரண்டு சாதனங்களுந்தான் காரணங்களென்று சொல்லவேண்டும். பேசுதல் மூலம் ஒருவனுடைய அனுபவஞானம் மற்றவனுக்குப் பிரயோஜனப்படுகிறது; எழுதுதல் மூலம் பயன் தரக்கூடிய எந்த விஷயமும் ஒருமுறை கண்டுபிடிக்கப்பட்டால் அது மக்களின் அழியாப்பொருளாகவும், அதுவே பின்வரும் சந்ததிகள், மேன்மேல் விருத்தி செய்வதற்கு ஆதாரமாகவும் செய்யப்படுகிறது. இம்முறையில் அறிவு என்னும் அனுபவ ஞானம் மேன்மேலும் பெருகிக்கொண்டே வருகிறது. முரண்பாடின்றி ஒரேவிதமான மாறுதல் எவ்வளவு மெதுவாகவும் பலஹீனமாகவும் இருப்பினும் முரண்பாட்டுடன் கூடின சக்திவாய்ந்த மாறுதலைவிட பயன்விளைவிப்பதாயிருக்கும். இம்மாதிரி, தலைமுறை தலைமுறையாகப் பெறுகிக்கொண்டே வரும் மக்களின் அநுபவ ஞானந்தான் மனிதவர்க்கத்தை தற்போதுள்ள உன்னத நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறது.

மேற்கூறிய அறிவாகிய தாயத்தின் பெருமையை மனிதன் ஆதிமுதல் உணர்ந்துதான், அதை வருங்காலத்தினர் அடைவதற்கும், வளர்ப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்துவந்திருக்கிறான். இவ்விருவகை ஏற்பாடு

* இந்த வியாசம் டாக்டர் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் சஷ்டியப்த பூர்த்தி அநுபந்தத்திலிருந்து எடுக்கப்பட்டது.

களுந்தான் கல்வித்துறையில் போதனை, ஆராய்ச்சி எனப்படுபவைகளாகும். இவைகளும் இவைகளைவிட சிறப்பானதும் "மாவும் மாக்களும் ஐயறிவினவே மக்கள் தாமே ஆறறிவுயிரே" (தொல்காப்பியம் மரபியல்) என்பதற்கேற்ப மக்களுக்குச் சிறப்பான பகுத்தறிவு வளர்ச்சியும் சமூகத்தால், பல்வேறு கால நிலயங்களின் முன்னணியாகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் சர்வ கலாசாலைகளின் பொறுப்பாக விடப்பட்டிருக்கிறது ஆகவே, உயர்தரப் படிப்பும் ஆராய்ச்சியும் ஓய்வுகால போக போக்கியங்களாகாமல் சமூக அபிவிருத்திக்கு இன்றியமையாத சக்தியையும் ஜீவ தத்துவத்தையும் அளிக்கக்கூடிய உயிர்நிலைகளாக இருக்கின்றன தேசிய நன்மையைப் பற்றிமட்டும் சிந்திக்கும் குறுகிய நோக்கத்துடன் பார்த்தாலுங்கூட துரிதமான முன்னேற்றமும், கடுமையான போட்டியும் நிறைந்த இக்காலத்தில் அவ்வப்பொழுது நேரும் மாறுதலான நிலைமையை நேரும்பொழுதே சமாளிப்பதற்கு அவசியமான தூய அறிவை பல்கலைக்கழகங்கள் தந்து உதவுகின்றன. கல்விநிலையம் ஸ்தாபிப்பதைவிட தேசத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றக்கூடிய உயர்ந்த பணி வேறு இல்லை.

மக்களின் நாகரீக முறையில், ஆழ்ந்த யோசனையின்றியும் அவசரமாகவும் அமைக்கப்பட்ட பல அம்சங்கள் இருப்பது மறுக்கமுடியாததாகும் எடுத்த கருமங்களை தவறான முறையில் ஈடேற்றுவதும் பணச்சிலாமணி முறையைக் கையாளுவதால் அதிகாரம் அபாயகரமான முறையில் தகுதியற்றவர்களின் கையில் சிக்கிக்கொள்வதும் சர்வசாதாரணமாக இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதனின் ஒழுக்க முறை அவன் அறிவு வளர்ச்சிக்கும், உலக பதார்த்தங்களில் அவன் பெற்றுவரும் ஆதிக்கத்திற்கும் ஏற்பச் செல்ல சக்தியற்றிருப்பது, தற்கொலை நிகழும் போர்முறைகளினல் மனிதவர்க்கம் முற்றிலும் அழியும் நிலைமை வருமோ என்ற அச்சத்தையும் உண்டு பண்ணுகிறது. நாகரீக அமைப்பில் வெற்றியுடன் துரிதமாக முன்னேருங்கால் 'டோப்ருக்' போன்ற சில முக்கிய அம்சங்களை கைவிட நேருவதுடன், அவைகளைத் திரும்பப்பெற மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாகவேண்டியிருக்கிறது. இந்த வியாசத்தில் சமூக அமைப்பிலுள்ள ஒரு கெடுதலைப்பற்றி கவனிப்போம்.

உயர்தரப் படிப்பும், ஆராய்ச்சியும் ஜன சமூகத்திற்கும் தேசத்திற்கும் இன்றியமையாதவை என்பதை அரை மனதாக ஒப்புக்கொண்டாலும், ஒவ்வொருவனின் சுபாவ இயல்பிற்கேற்ற துறையில் பயிர்ச்சி அளிக்கவேண்டியது அவசியம். ஆனல். தற்காலம் படிப்பு முறையோ இம்மாதிரி ஒன்றும் செய்வதாயிராமல், பொருத்தமற்ற இடத்தில் பொருளாதாரக் கொள்கைகளைப்புகுத்தி உயர்தரப்படிப்பை கேவலம் விலை கொடுத்து வாங்கும் கடைச்சரக்காக மாற்றி பணச்செலவு செய்யும் சக்தி வாய்ந்தவர்களுக்கு மட்டுமே உபயோகப்படும்படியாக செய்துவிட்டது. உண்மையில் நடுத்தரப்படிப்புக்கூட இந்தியாவிலுள்ள பெரும்பான்மை ஜனங்களின் இயல்பிற்கு ஏற்றதாயில்லை. ஆனல், கல்வி முறையை விவேகமான முறையில் அமைத்திருந்தாலோ போதிய திறமையுள்ள எந்த ஏழைப்பையனும் பெண்ணும் உயர்ந்த வகுப்பு முடிய படிப்பதற்குச் சாத்தியமாக இருக்கும். இவ்விலட்சியம் கைகூட நாம் செய்ய வேண்டிய காரியங்களிலொன்று, இலவசப்படிப்பும் ஏழைகளுக்கு இலவச சாப்பாடும் கிடைக்கக்கூடிய சர்வ கலாசாலையொன்று இந்தியாவில் ஏற்படுத்துவதேயாகும். இம்மாதிரியான தன்னிகரற்ற கலாசாலையை ஆழ்ந்து கவனிப்போம்.

அதன் வித்தியார்த்திகள் இந்தியாவின் பற்பல இடங்களிலிருந்து வருவதுடன் ஆண் பெண் என்ற இருபாலரிலும் மிகுந்த திறமை வாய்ந்தவர்களாகவும், அவர்களில் பெரும்பாலோர் ஏழைக் குடும்பத்தவர்களாகவுமிருப்பார்கள். கலாசாலை திறம்பட நடக்கும்

பொருட்டு வித்தியார்த்திகளின் தகை ஆரம்பத்தில் சுமார் ஆயிரத்திற்கு மேற்படாமலிருக்கவேண்டும்; இவ்வாயிரம் பேர்களும் இந்தியா முழுவதிலிருந்தும் பொருக்கி எடுக்கப்படுவதால், பேராற்றலுள்ளவர்களை மாத்திரம் தேர்ந்தெடுப்பது சாத்தியமாகும் திறமையுள்ள இம் மாணவர்களின் கல்விமுறை வகுப்பில் நடக்கும் பிரசங்கங்களோடிராமல் செவ்வையாக அமைக்கப்படவேண்டும். ஆகையால் அந்த ஸ்தாபனம் ஒரு சர்வகலாசாலையாக இருக்கவேண்டும்; இல்லாவிடில் கல்விமுறையை அமைத்துக்கொள்ள அதற்கு உரிமையிராதல்லவா? அக்கலாசாலையின் உபாத்தியாயர்களும் வித்தியார்த்திகளும் அவ்விடத்திலேயே குடியிருக்க வசதிகள் வேண்டும். வழக்கம்போலுள்ள பாடங்களைத்தவிற உலக சரித்திரத்தில் முக்கியமான சம்பவங்கள், தற்கால விஞ்ஞானபோக்கின் முக்கிய அம்சங்கள், சரித்திரத்தைப்பற்றிய விஷயங்கள் இவைகளும் அவர்கள் கற்கவேண்டிய விஷயங்களாகும். இவைகளைவிட முக்கியமான மக்களின் தாய உரிமைகளாகக் கருதப்படுகின்ற ஒழுங்குமுறை சீர்ப்பிரமாணம், இவைகளைப் பற்றியும் அவர்களுக்குக் கற்பிக்க எத்தனிக்க வேண்டியதவசியமாகும். படம் வரைதல், உயர்தர சங்கீதம் பாடல், உயர்ந்த ரகசங்கீதம், கலை இவைகளைப் பாராட்டும் திறமை ஒவ்வொரு வித்தியார்த்தியின் உபகர்ணங்களாகும் அத்துடன் வித்தியார்த்திகளின் மூர்த்திவளர்ச்சியில் சன்மார்க்க முறையில்தான் அதிக கவனம் செலுத்தவேண்டும். தொண்டு ஒற்றுமை இவைகள் அவர்களின் லட்சியங்களாகக் கருதப்படுவதோடு, அவைகளில் அனுபவம்பெற சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவேண்டும். மத போதனை பண்டைகால முறையில் இருத்தல் கூடாது; ஆனால் உலகிலிருந்த பெரிய சமயங்கள் ஆன்மாவைப்பற்றிய பிரச்னைகளையும் எல்லாமதங்களுக்கும் பொதுவான தர்மசாஸ்திரங்களையும் எவ்வாறு கையாண்டன வென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒழுக்கமுறை போதனையில் அனேக சங்கடங்கள் இருக்கின்றனவென்பது தெரிந்த விஷயம்; ஆனால் அம்முறையை சாரணரியக்கம் மற்றும் இதுபோன்ற வேறு இயக்கங்களிலிருந்து நாம் அடைந்துள்ள அனுபவத்தின் மூலம் ஒருவாராகக் கையாளலாம். அதோடு மனித சுபாவத்தைப் பற்றி வகுத்து விளக்கி அநேகம் புதிய செய்திகளை மனநூல் ஆராய்ச்சி நாடோறும் நமக்குத்தந்து உதவுகின்றது. இவ்விஷயம் மிகவும் முக்கியமானதாகையால் அதைப் பல்வகைகளிலும் ஆராய்ச்சி செய்யவேண்டும்; அதன்பயனை நாம் அறைகுறை வெற்றியடைந்தால் கூட நம்முடைய முயற்சிக்குத்தகுந்த பரிசாகும். எவ்வாறெனினும், இப்பிரச்னையை சிந்திக்காமல் இருப்பதால் அதனை நாம் தீர்த்துவிடப்போவதில்லை.

மிகவும் ஏழையான இந்தியனும் உயர்ந்தவகுப்புமுடிய படிக்கக்கூடிய இலவசகலாசாலை ஒன்று இருக்கவேண்டியது நலமெனக்கருதினால் அவ்வண்ணம் கைகூடுவது சாத்தியமாவென்று வினவலாம். மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் முழுச்சம்பள வருமானத்தை நீக்கிவிட்டாலும் பாதிக்கப்படாமல் நடைபெறக்கூடிய பெருத்த மூலதனத்தையுடையதும் சிக்கனமான முறையில் நடத்தப்படுவதும், குடியிருப்பு வசதியுள்ளதும், குருகுலம்போன்று ஓரிடமானதுவும், இவ்வளவும் ஒருங்கே அமைந்துள்ள சர்வகலாசாலை எது என்றுகேட்டால், அண்ணாமலை சர்வகலாசாலை யென்றுதான் நான் நினைக்கிறேன். இக்கலாசாலையின் வன்மை மிகுந்த ஸ்தாபனமும், அரசாங்கத்தாரும் சேர்ந்தளித்த சாசுவதநிதி 47-லக்ஷமும், வருவாயை ஜாக்கிரதையாகக் கையாண்ட முறையில் 60-லக்ஷமாகப்பெருகியிருக்கிறது இந்நிதியின் வட்டியும், அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கும் வருடாந்திர மானியம் (இம்மானியத்தொகை தற்பொழுது 1·9-லக்ஷங்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது.) ஒன்றறை லக்ஷமும் சேர்ந்து 4-லக்ஷமும் அதன் மொத்த வருமானத்தில் 80 சதவீதமாகிறது. மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் சம்பளம், பரீக்ஷை கட்டணங்கள், மற்

றும் விசேஷ கட்டணங்கள் இவைகளின் கூட்டுத்துகையிலிருந்து உபகாரச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிற தொகையைநீக்கின நிகரவருமானம் மொத்த வருமானத்தில் 13 சதவீதமும், இன்னும் பலவகைப்பட்ட இதரவருமானம் 7 சதவீதமும் ஆகிறது. ஆனால், கடைசியில் சொல்லியிருக்கும் வருவாய் மாணவர்களுக்குச் சம்பளம் இல்லையென்று திட்டம் செய்தாலும் பாதிக்கப்படாது.

சம்பளவசூலை அடியோடு நிறுத்திவிடுவதென்ற இந்த துணிச்சலான முறையின் பலாபலன்களைப்பற்றி சற்று ஆராய்வோம். அவ்வாறு செய்வதால் அக்கலாசாலை இந்தநாட்டில் மட்டுமல்ல, உலகத்திலும்கூட தன்னிகரின்றி தனிப்பட்டதாக இருப்பதுடன், நன்னடத்தையும், திறமையும் வாய்ந்த சிறுவர்களையும் சிறுமிகளையும் நாட்டிற்குப் பிரயோஜனப்படும் வகையில் பயிற்றும் சிறந்த தொண்டில், இந்தியாவிலுள்ள மன்னர்கள், ஜனங்கள் இவர்களுடைய நன்கொடைக்கும் உதவிக்கும் உரியதாகும். அக்கழகத்தின் வித்தியார்த்திகள் சிறந்த தலைமை ஸ்தானங்கள் வகிப்பார்களென்பது திண்ணம்; அவர்களில் சிலரேனும் தாங்கள் கடமைப்பட்டுள்ள கலாசாலைக்கு பொருளுதவி புரிய முன்வருவார்கள் இந்த நன்கொடைகளை மூலதனமாகக்கொண்ட நிதியின் வட்டியைக்கொண்டு உதவி நாடிவரும் வித்தியார்த்திகளுக்கு இலவச சாப்பாடு அளிக்கும் முறை பெருக்கப்பட்டு நாளடைவில் கழக ஆதரவில்வந்துள்ள எல்லோர்க்கும் இருக்க இடமும், சாப்பாடும், படிப்பும் இலவசமாக அளிக்கும் நிலைமை அக்கலாசாலைக்கு வந்துவிடும்.

மேலே கூறியுள்ள யோஜனை எந்த வகையிலும் புதிதல்ல; அறிவை மிகுந்த மதிப்புடன் கருதவேண்டுமேயல்லாமல், விலைகொடுத்து வாங்கும் கடைச்சரக்காக நினைக்கக்கூடாதென்ற ஹிந்து கொள்கைக்கு ஏற்றதாகும். பழைய காலத்து குருகுலங்களைப்போல இப்பொழுதுள்ள பாடசாலைகளிலுங்கூட நாட்டிலுள்ள எந்த ஏழைப்பையனும் உயர்ந்த வகுப்புவரை இலவசமாகப் படித்துவரும் முறை இருந்துவருகிறது. ஆகையால் இம்மாதிரியான முறையை தற்காலத்திற்கேற்றதான தத்துவம் வாய்ந்த நவீனப்படிப்பு முறையிலும் கையாளவேண்டுமென்ற யோஜனை பொருத்தமேயல்லவா? ஆத்மசக்தியைப்பற்றிய விஷயங்களில் முதிர்ந்த அனுபவம்பெற்ற இந்தியா நவீன நாகரீகத்தின் நிலையற்ற அமைப்பை ஸ்திரப்படுத்துகிற வகையில் மதிப்பிடத்தக்க உதவியளிக்கக்கூடும். மக்கள் தொகுதியின் இறுதி இலட்சியமாகக் கருதப்படும் பழைமை புதுமைகளை ஒன்றுசேர்க்கும் முறையில் இந்தியா கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் பலஉள. இம் முக்கியமான பணியிலும், இதைவிட அனுபவசாத்தியமானதும் சிரமமுள்ளதுமான தற்போது எடுத்துக்கொள்ளவேண்டிய புனர் நிர்மாணப் பிரச்னைகளிலும் பூரண பாண்டித்தியம்பெற்ற திறமைவாய்ந்த இந்தியாவின் சிறுவர்கள் சிறுமிகள் இவர்களின் உதவி இன்றியமையாததாகும். புத்திசாலித்தனத்திற்கு முன்னணியில் நிற்கும் நம் தமிழ்நாடு இத்துறையில் வழிகாட்டியாக வருமா? தெய்வங்கள் தீர்மானம் செய்யட்டும்.

(மேலேகூறியுள்ள யோஜனை): இது ஒரு மூடக்கனவா, அல்லது ஆகாயக் கோட்டையா? ஒருவேளை அவ்வாறு இருக்கலாம். ஆனால் மனிதன் கனவு காணும் பிராணியே; அவன் கனவின் ஞாபகம், நினைவிலுங்கூட அவனிடம் குடிகொண்டிருக்கும். பண்டைகாலத்தில் மூடர்கள் மனிதன் எல்லையற்ற சமுத்திரத்தை கடக்கக் கூடுமென்றும் பறவைகளைப்போல் ஆகாயத்தில் பறக்கக்கூடுமென்றும் கனவு கண்டிருக்கிறார்கள். மனிதன் எப்பொழுதும் ஆகாய கோட்டை கட்டுவதில் சமர்த்தன்; அத்தோடுநில்லாமல், உலகில் மிகவும் உரமான "நம்பிக்கை," "தைரியம்" இவைகளை சாமான்களாகக்கொண்டு அக்கோட்டைகளை பூமியிலும்கட்ட சதா சர்வதா யத்தனித்திருக்கிறான். இவ்வாறு கனவு காண்பவர்களை உலகம்

விட்டுவிடமுடியாது. ஏனெனில் உலகமே ஈசுவரனின் ஓர் கனவல்லவா? தற்காலத்தில் கனவு காண்பதில் தலைசிறந்து விளங்கிய கவி தாகூரின் இன்னும் அணையா சுடரொடுகூடிய கல்லறையினின்றும் எதிரொலியுடன் எழுவதுமான மனவெழுச்சியுண்டாகும் அறிவுரைகள் பலன் தருவதாயிருக்கட்டும்.

"உலகபிதாவே! பீதியற்ற மனதும், தடைபடாத அறிவும், தலைவணங்காத் தன்மையும் இவ்வனைவற்றிற்கும் உறியதான ஸ்வதந்திரத்தை என் தேசம் அடையட்டும்."

---



# வெள்ளி விழாக் கொண்டாட்டம்.

கா. வே. ஸ்ரீனிவாஸன்
(காசி ஹிந்து விச்வ வித்யாலயா)

1916 வருஷம் ஜனவரி மாதம் 21உ கங்கைக்கரையோரத்தில் இரு தபஸ்விகள் யாகம்செய்தனர். அவ்வியாகத்தில் தோன்றியது ஹிந்து சர்வகலாசாலை என்ற இளம் குழந்தை.

ஜனவரி மாதம் 21உ 1942-ல் வஸந்த ருது பிறந்திருக்கிறது. அத்துடன் அதே வஸந்த ருதுவில் பிறந்த குழந்தை இருபத்தைந்தாண்டு நிறைவு பெருகிறது.

காசி மனிதனுடன் பிறந்தது. மிகப் புராதனமானது. ஹிந்துதர்மம் பிறந்தது அங்கே. பௌத்தமதம் பிறந்தது அங்கே. இவ்விரு பெரும் நாகரீகங்களுக்கும் முதல் இடம் காசி. இந்நவ நாகரீகத்திற்கும் காசி மறுபடியும் பிறப்பிடமாயிற்று அன்று.

ராமேச்வரம் முதல் ஹிருஷீகேசம் வரை காசியின் புனிதத்திற்கு எண்ணற்ற ஜனங்கள் சோறுகின்றனர். அவர்கள் புண்ணிய நதி கங்கையில் பயபக்தியுடன் மூழ்கி மலர்ந்த உள்ளத்துடன் தெளிவுற்ற உடலுடன் எழுந்திருக்கின்றனர். ஈசன் விச்வநாதர் கோயிலைத் திணறித்தேடிப் பிடித்து பரபரப்புடன் வழிபடுகின்றனர். காசியின் சந்துக்களைக் கண்டு வெகுண்டு பிரமிக்கின்றனர். அதன் அழுக்கிலும், அதன் பழமையிலும் புண்ணியத்தை நோக்குகின்றனர். இவர்கள் யாவரும் முன்னெல்லாம் புனிதம் கொண்டு அப்படியே திரும்பினர். இப்பொழுதோ, இவைகளுக்கு மாற்றுப்போல் காசி விச்வ வித்யாலயா என்ற ஒரு சிரு நகரத்தைக்காணுது ஒருவரும் திரும்புவதில்லை. அதன் விஸ்தாரத்திலும், அதன் கணக்கற்ற பாதைகளிலும், அதன் பிர்மாண்ட கட்டடங்களிலும் அப்படியே மயங்கித் திணறிப் போன பிறகே திரும்புகின்றனர். ஈசன் விச்வநாதரைக் தொழுது ஆநந்த பாஷ்பத்தால் மூடின கண்கள் சரஸ்வதியின் பெரும் கோயிலைக்கண்டு லயித்து மலருகின்றன.

இம்மாதிரி நடப்பது சாதாரண நாளிலேயே. ஆனல் ஜனவரி 21தேதி 1942ல் பார்த்த யாவரும் தங்கள் தங்கள் கருமங்களை உதரித்தள்ளிவிட்டு இச்சிறு அழகிய நகரத்தில் வாழ வீடொன்று அமர்த்தக் கிளம்பியிருப்பார்கள் வயதானவர்களும் தங்கள் வயதை மறந்து பாலர்போல் இக்கலாசாலையில் மாணுக்கராகத்துணிந்திருப்பர். அயல் நாட்டினர் இதைப்பார்ப்பின், அவர்கள் இது ஒரு பெரிய உற்சவமே என்று எண்ணுவார்களேயன்றி, படிப்பில் மூழ்கிக்கிடக்கும் ஆசிரியர்களும், மாணுக்கர்களும் கொண்டாடும் ஒரு விசேஷ தினம் என்று சொல்ல மாட்டார்கள். ஆனல் இது தான் இந்தியா. இது தான் இந்திய உள்ளப்.

ஒரு விசேஷ தினத்தன்று மேகவர்ஷம் என்பது சகஜம். அது ஒன்று இருந்தால் புண்ணிய தினத்தின் புனிதத்திற்கு அறிகுறியென்பதும் நமது நம்பிக்கை. இப்பெரும் புண்ணிய தினம் அதற்கு விலக்காகவில்லை. அதற்கு இருதினங்கள் முந்திவிடாது பொழிந்தது. வெறும் மழை மட்டுமல்ல. பனிக்கட்டி மழை.

வஸந்த பஞ்சமி பிறந்திருக்கிறது. காலை 5-30 மணிக்கு வரிசை வரிசையாக, சாரி சாரியாக, யுவர்களும், யுவதிகளும் மஞ்சளாடையணிந்து, கீதம் பாடிக்கொண்டு கங்கைக் கரையை நோக்கிச் செல்லுகின்றனர். அழகாக

அங்கொரு மேடை. அதன்முன் பல வைதீகர்கள் சாம வேதம் ஓதுகின்றனர். ஒவ்வொருவராக அம்மேடை முன் செல்லுகின்றனர் கையால் ஒரு பிடி வஸந்த மலருடன் அம்மேடை மீது மலரைச்சூடுகின்றனர் அதன்முன் கும்பிடுகின்றனர். பின் சென்று வரிசையில் நிற்கின்றனர். வரிசை—கோடி கண்டுபிடிக்கமுடியாது அவ்வளவு நீளம்—திரும்புகிறது. இதுதான் வஸந்த பஞ்சமியன்று காசி வித்யாலயத்தின் வித்யார்த்திகள் வழிபடும் அஸ்திவாரக் கல்.

ஹிந்து விச்வ வித்யாலயத்தின் 25வது வெள்ளிவிழாக் கொண்டாட்டம் இத்துடனும், வைதீக யக்ஞத்துடனும் ஆரம்பித்தது. ஹவனங்கள், யக்ஞங்கள், சித்திர கண்காக்ஷிகள், கதர் காக்ஷிகள், இந்தியாவின் பெயர்பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஆடின கிரிக்கெட் முதலிய பல பொழுது போக்கு அம்சங்கள் இருந்தாலும், இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது 21ந்தேதியன்றய பட்டமளிப்பு விழா. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பிரமுகர்கள் வந்திருந்தனர். இந்தியாவின் எல்லா சர்வகலாசாலைப் பிரதிநிதிகளும் இவ்வைபவத்தைக் காண வந்திருந்தனர். அயல் நாட்டு சர்வகலாசாலைகளும், உயரிய கழகங்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. அவைகளில் லண்டன் சர்வகலாசாலை, அபர்டீன் சர்வகலாசாலை, டப்ளின், அட்டாவா சர்வகலாசாலைகள், ராயல் சொஸைடி இவைகள் முக்கியமானவை. கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டும் கூட. இச்சகோதர கலாசாலைகளெல்லாம் தங்கள் தங்கள் ஆசியைக்கூறி, வைபவத்தில் கலந்துகொண்டன.

அன்று ஒரே ஜனத்திரள். எங்கிருந்து தான் மாணவரை சலிக்கவைக்கும் அமைதி நிலவும் இக்கலாசாலைக்கு இவ்வளவு ஜனத்திரள், இவ்வளவு சப்தம், இவ்வளவு வாஹனங்கள் வந்தனவெனப் புரியவில்லை இந்தியாவின் மக்கள் யாவரும் அன்று வெள்ளி விழாக்காண காசிக்குக் கிளம்பி வந்துவிட்டார்களோவெனத் தோன்றியது. பிரயாகையில் நடக்கிறதா கும்பமேளா, அல்லது காசியிலா என்ற சந்தேகம் எழுந்தது! அன்று திருநாள், தேர் உற்சவம் போன்றுதான் இருந்தது.

மேடைமீது மகா ராஜாக்களுடைய பறக்கும் தலைப்பாகைகள். பலவித பட்டம் பெற்று. விதவிதமான பட்டத்திற்கேற்ற அங்கிகளணிந்த ஆசிரியக் கூட்டம். வெள்ளை வெளேரென வேஷ்டியணிந்து, வெள்ளை வெளேரென கண்ணைக் கவரும் தென்னிந்தியத் தலைப்பாகைகள். மேற்கத்திய நாகரீக உடை, வடநாட்டு ஷேர்வாணிகள். பஞ்சாபி சல்வார்களும், குல்லாக்களும். மஞ்சள் உடையணிந்து, மதன் மறு பிறப்பை ஞாபகமூட்டும் அழகிய மாதர்கள். பந்தலுக்குள் இருந்த இக்கூட்டம் நாகரீக கூட்டம் என்று சொல்லப்பட்ட கூட்டம். பந்தலுக்கு வெளியில் கள்ளம், கபடமற்ற, வெகுதூரத்திலிருந்துகூட கம்பளி, ராஜாவுடன் மூட்டை கட்டிக் கொண்டு வந்திருக்கும் உடையற்ற மண்ணின் புதல்வர்கள். நாற்பதினாயிரம் அன்று.

இப்பெரும் கூட்டத்தை சமாளிப்பதெப்படி! ஒரே ஆரவாரம், ஒரேயமர்க்களம். இக்கூட்டத்தில் முக்கால்வாசிப்பேர் படித்தோர். நாகரீகத்தில் தவழுபவர்கள். புதுமையிந்தியாவின் பிரதிநிதிகள். ஆனால் அன்றைய நிர்த்தாளி நம்முடைய கீழ்மைத்தன்மையை சுட்டிக்காட்டிற்று. உடை நாகரீகமாகாது. தலைக்குப்பிலுக்கு நாகரீகச் சின்னமாகாது. உன்னமேயுண்மையில் நாகரீகச் சின்னம். நம்மிடம் கட்டுப்பாடு கிடையாது. அடக்கவொழுக்கம் இல்லை. நாம் அடிமைகள் என்பது நன்கு தெரிந்தது. எப்பொழுதும் நாம் அடிமையில்தான் மூழ்கிக்கிடப்போம். நம்மை நாமே ஆளத்தக்க அடக்க, ஒழுக்கம் இன்னும் ஏற்படவில்லையென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கியது நாம் தினே தினே இம்மாதிரி காக்ஷிகளைக் காணுகின்றோம். மேன்மையடைய வேண்டிய மக்கள் எப்படி நடப்பது என்றறிவோம்.

சுதந்திரத்திற்கேது அறிகுறி, எந்த குணங்கள் இருந்தால் தான் சுதந்திரம் அடைந்து, அதை ஸ்திரமாக்கிக் கொள்ள முடியும் என்று பேசுகிறோம். ஆனால் இதெல்லாம் நாம் நடைமுறையில் காண்பிக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் காற்றில் இவைகளை பறக்கவிட்டுவிடுகிறோம்.

அன்றயதினம், நாட்டின் மேன்மையிலும் விடுதலையிலும் நம்பிக்கை வைத்துள்ளவர்கள், நாட்டின்மேல் தீரா வன்புடையவர்கள்.யார் பார்த்தாலும் நம்பிக்கையை இழந்திருப்பார்கள். எல்லாரும் படித்தவர்கள். சாதாரண பள்ளிக்கூட மாணாக்கர்களும் அன்று, ஆசிரியர்களும் அன்று. உயர்தரக் கல்லூரியில் இருப்போர். வந்திருந்தவரெல்லாரும் உயர் வகுப்பினர். இந்தியாவின் வருங்கால நம்பிக்கைகள். இவர்களா இவ்வளவு கேவலமாக நடந்துகொள்ளுகிறார்கள்! என்று ஆச்சர்யமாயிருந்தது.

அன்றைய விழா இரு முக்கிய விஷயங்களைச் சுட்டிக்காட்டியது. ஒன்று, நாம் இன்னும் அடிமைக்குணங்களை கைவிடவில்லை. சுதந்திரம் அனுபவிக்கும் நாட்டினர்கின்றியமையாத பழக்க வழக்கங்களை இன்னும் நாம் அடையவில்லை. இரண்டாவது, நாம் இன்னும் காரியங்களை சாதிக்கும் முறையில் தேர்ச்சியடையவில்லை. ஒரு பெரும் பொதுக் காரியத்தை நிர்வகித்து சுலபமாகச் சீருடன் செய்ய சக்தியற்று இருக்கிறோம். முக்கியமாக, வடநாட்டினர் இவ்விஷயத்தில் மிக, மிகப் பின்வாங்குகின்றனர். தென்னிந்தியர்,இந்தத்துறையில் மிகமுன்னேறியிருக்கின்றனர் என்று எனக்கு தோன்றுகிறது. மெச்சத்தக்கதொரு விதத்தில் அமைதியுடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்துக்கொள்வதிலும் வடநாட்டினர் பின்வாங்குகின்றனர். (ஏன், மிகக் கேவலமான ஸ்திதியில் இருக்கின்றனர் எனச்சொல்லலாம்!) இவ்விரு அம்சங்களும் நாட்டிற்கு மிக முக்கியமான விஷயங்கள். நம் தலைவர்களும், நாட்டபிமானிகளும் இதை அறிந்து இதற்கு முதலில் வழி தேடவேண்டும். சுதந்திரம் அடையப் போகிறவர்களுக்கோ அல்லது உடையவர்களுக்கோ இருக்க வேண்டிய ஒரு சுயமரியாதை, கௌரவம், பிறரின் சௌகரியங்களில் கருத்து செலுத்துவது, பிறருக்காக எண்ணுவது அல்லது விட்டுக்கொடுப்பது, பொது இடங்களிலும், கூட்டங்களிலும் கையாளவேண்டிய ஒழுங்குமுறை, மேன்மை நடத்தை, ஒழுக்கம், பொறுமை முதலிய மேன்மைக் குணங்கள் நம்மிடம் இல்லவேயில்லை. உதாரணமாக, ஒரு சிறு சந்தர்ப்பத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நடவடிக்கை ஆரம்பமானவுடன், ஒலிபெருக்குக்கருவி சரியாக வேலை செய்யாததால், பேச்சு சரியாக கேட்கவில்லை. மாணாக்கர்கள் பொறுமையற்று ஒரே கூச்சல், ஆரவாரம் செய்யத் தொடங்கிவிட்டனர். அவர்களுக்குள்ளேயே சிறு சச்சரவுகளும், சண்டைகளும் உண்டாகின. தலைவர்கள் பன்முறை கேட்டுக் கொண்டும் பயனில்லை. ஜவஹர்லால் நேரு எழுந்து உரக்கக் கத்தினார். காந்திஜீயும் எழுந்து தமது மழலைச் சொற்களால் மயக்க நினைத்தார் வீணில். கைகள் குலுங்க, உடல் நடுங்க உட்கார்ந்திருந்த இன்னொரு தபஸ்வி—மாளவியாஜீயின் கண்களில் நெருப்புப் பறந்தது. கிழவர் பாவம் எழுந்து கத்தினார். பயனில்லை! ஒலி பெருக்குக் கருவிபோன்று தொண்டை படைத்த ராதாகிருஷ்ணன் எழுந்து அதட்டினபிறகே சிறிது ஓய்ந்தது அமர்க்களம். இச்சிறு சம்பவம் முன்சொல்லப்பட்ட இரு அம்சங்களையும் விளக்குகிறது. முதலில், நிர்வாகஸ்தர்கள் இக்காலத்தில் எந்த விசேஷத்திற்கும் இன்றியமையாததாக ஆகிவிட்ட ஒலிபெருக்கு கருவி சரியாகயிருக்கும்படி ஜாக்கிரதை எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். அப்படியே சிறிது எதிர்பாராதபடி பிசகு ஏற்பட்டுவிட்டாலும் கூட்டம் கட்டுப்பாடு, ஒழுங்கற்று நடப்பது அழகல்ல. நடவடிக்கை ஒன்றும் காதில் விழாவிடினும், கலக்கமற்று, சஞ்சலமற்று, பொறுமையிழக்காது, கூட்டத்தை கலைக்காது கட்டுப்பாட்டுக்கேனும், ஒழுங்கு முறைக்கேனும் அழையாது உட்கார்ந்திருப்பது கடமையாகும். அதுதான் உண்மை நய இந்திய உள்ளமாகும். அது

தான் சுதந்திரம் அடையப்போகும் மக்களின் பரிபக்குவமடைந்த உள்ளமாகும்.

இச்சிறு சாதாரண சம்பவத்தை நான் அநாவசியமாகப் பெரிதாக்கி கூறுகிறேன் என்று நினைக்கலாம். இந்நான்கு வருஷ அனுபவத்தில் இதைப்போல, என் இதைவிட பன்மடங்கு அதிகமான சம்பவங்கள் பலவற்றை நேரில் அனுபவித்ததின் பயனைத்தான் இது இங்கு கூறப்படுகிறதேயொழிய, சிறுவன் ஒருவனுக்குள்ள அனுபவமற்ற குற்றம் கூறும் சம்பவம் அன்று இது. இது எல்லோரும் தீவிரமாக உணரவேண்டிய விஷயம்.

அம்மேடை மீது இருதெய்வீக உருவங்களைக்காண கண்கொள்ளாக் காக்ஷியாக இருந்தது. உயர் லக்ஷியங்களைக் கைகொண்டவுயர் மானிடர்கள் என்று நம்ப நமது பழைமை ரிஷிகள் போன்று காணப்பட்டனர் அவர்கள் இருவரும். இருவரிடமும் ஓர் சாந்தி; ஓர் ஒப்புயர்வற்ற மேன்மைத் தோற்றம்; மஹா புருஷர்களின் தோற்றம். தங்கள் முன்னிற்கும் பெரும் மானிடக்கூட்டம், பாவம் விதியின் பயனால் கீழ்மை என்றொரு குட்டையில் அமிழ்ந்து கரையேறத் தவிக்கின்றதே என்றிரங்குவதுபோல் கருணையுடன் அத்திரளை நோக்கி நின்றனர் அவ்விருவரும். இவ்விரு புருஷர்களும் இம்மஹா முயர்ச்சியின் ஆரம்பத்தை ஆரம்பித்துவைத்தனர்; அதற்கு நாமகரணம் செய்துவைத்தனர். அதே இரு புருஷர்களும் அம்முயற்சி உருவடைவதைக் கண்டானந்திக்க வேண்டுமென்பது எவ்வளவு பொருத்தமானது! ராதாகிருஷ்ணன் அம்மஹா புருஷர்களைவைத்த ஒட்டும் அதிசல்லிய சாமர்த்தியம் படைத்த சாரதிபோலத் தோன்றினார்.

ராதாகிருஷ்ணன், முதலில் எல்லாரும் வழக்கப்படி பிரமிக்குமாறு ஒரு சிறு ஆலங்கட்டி மழையுடன் அன்றைய நடவடிக்கைகளிற்கு அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். பின் ராஜாக்களுக்கும், வர்த்தகயரசர்களுக்கும், நாட்டிற்கும் கலாசாலைக்கும் கைங்கர்யம்செய்து மெலிந்த நாட்டின் பெருமைப் புதல்வர்கள் சிலருக்கும் கௌரவ பட்டம் (பரீக்ஷை தொந்திரவின்றி) அளிக்கப்பட்டன. முதன் முதல் தெந்நாட்டுப் பிரமுகர்கள் இருவருக்கு கௌரவம் அளிக்க வடநாடு ஆரம்பித்திருக்கிறது. மஹா கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளும் பழைய காங்கிரஸ் தலைவர், பெருச்சாளியான, விஜயராகவாச்சாரியாரும் கௌரவத்திற்கு ஆளானது மெச்சத்தகுந்ததே. தென்னிந்திய தவப்புதல்வர்களும் பாரதத் தாய்க்கு பெருமையளிக்கின்றனர் யென்பதை பன்னாள்கழித்து நல்தினமான அன்றுதான் உணர்ந்தனர் போலும் வடநாட்டினர்! வடநாட்டினரின் (முக்கியமாக இளம்பிராயத்தினர்களின்) தென்னிந்தியாவைப் பற்றியும் தென்னிந்தியரைப் பற்றியும் உள்ள ஆச்சர்யப் படும்படியான விஷய சூன்யத்திற்கு அன்று பங்கம் ஏற்பட்டுவிட்டது! இவ்விருவரும் யார் என்று கேட்கும் வடநாட்டு மாணாக்கர்களின் விஷயஞான முதிர்வு உண்டாக்கியது இந்திய நாட்டிற்கே ஒரு நல்காலம்தான்!


காந்திஜியவர்கள் அஞ்ஞானத்தைப் போக்கடிக்க உபதேசிக்க வந்திருக்கும் ஒரு மஹரிஷிபோன்று எழுந்து பேச முற்பட்டார். அக்குரலில் என்னவாகர்ஷண சக்தி! அதில் என்ன சாந்தி, என்ன இனிமை நிலவி நிற்கிறது! குழந்தை பொறிந்து தள்ளும் மழலையேயது. அதைக்கேட்ட மாத்திரத்தில் கல்லும் கரைந்துதான் தீரவேண்டும்!

புத்திபுகட்டும் தகப்பனின் தொனி ஒரு சமயம். கூடஉறவாடும் நண்பனின் மொழிகள்போன்ற தொனி மறுசமயம். "வீணைக் கெட்டுப்போகாதே, பையா, மேன்மையில் பிறந்து கீழ்மையை ஏன் தேடுகிறாய்?" என்ற தொனி மற்றொரு சமயம். "உனக்கு என்னாலான மட்டும் சொல்லிப் பார்க்கிறேன். பிறகு உன் னிஷ்டம்" என்ற நம்பிக்கையற்றதொனி பிறகு. உடனே மாறிஏற்பட்ட வாத்ஸல்யம், அன்புகலந்த இனியமொழிகள். இப்படியே கீதாசார்ய, மதாசார்யர் போன்ற பிரசங்கம் கருக்காகசொய்து விட்டகன்றார் நய இந்திய விச்வகர்மா.

வழக்கம்போல் பாண்டித்திய வள்ளல் அல்லது கலாசாலைச் சொற்பொழிவு போல் கேட்பவர்களை முடிக்கும் நேரத்தைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும்படி செய்த பிரசங்கம் அல்ல அது. காந்திஜீ புத்தி வளர்ச்சியில் மாத்திரம் நம்பிக்கைகொண்டவரல்ல. அது அவரினும் கீழ்பட்டவர்க்கே பெரிதெனத் தோன்றும். மானிடரில் எட்ட முடியா மேன்மையடைந்துள்ள காந்திஜீ ஆத்ம விசாரணையில் நம்புகிறவர். பேச்சில் நகைச்சுவை ஒருபுரம்; அத்துடன் கலந்து நிற்கும் கடுக்காய் கசப்பொருபுரம். "நான் பாண்டிதனும் இல்லை, ராஜாவும் அல்லவே! எனக்கிங்கென்னமாக இடம் கிடைத்தது" என்ற பொழுது ஒரு நகைச்சுவையும் தொனித்தது. எளனத்திலும் தொட்டு நின்றது.

பண்டித மாளவியாவிற்கு, இவ்விருபத்தைந்தாண்டு விழா இன்னொரு காயகல்ப சிகிச்சை செய்துவிட்டது. ஆவேசம் வந்தவர்போல், முதுமையில் இளமை கலக்க மறுபடியும் தனக்கே சொந்தமாகச் செய்துகொண்டுவிட்ட "பவதி பிக்ஷாம் தேஹி"யென்று கையை நீட்ட ஆரம்பித்து விட்டார். சிலருக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் தெரியவே தெரியாது. கையில் அதுகூட இல்லாவிடினும், வாயில் வருவது ஆயிரம், பத்தாயிரம் தான்." ஆனால் மாளவியாவிற்கோ லக்ஷம், கோடி. "160 லக்ஷம் தான் இதுவரை சேர்க்கமுடிந்தது. இன்னும் இப்பெரு வேலையைத் தொடர, 40, 50லக்ஷம் தான் வேண்டும்" என்றார். மனிதர் செய்தாலும்சரி, செய்யாவிட்டாலும்சரி, வழக்கம்போல் காசி விச்வநாதரைக் கூப்பிட்டு விச்வ வித்யாலயத்தை ஒப்பித்துவிட்டார்.

நாசூக்குடன் சரமாரி பொழிந்துகொண்டே யெழுந்தார் ராதாகிருஷ்ணன். அவருடைய மழைபோன்ற சொற்றொடர்களை மெச்சுவதா? அவருடைய சொற்களின் கபீரத்தை மெச்சுவதா? புயல்போன்று சூழ்ந்து கொள்ளும் அவருடைய வேதாந்த வழியைச் சொல்லுவதா? அல்லது அவருடைய சாந்தமான, ஆனால் திடீரென எதிர்த்து நிற்கும் உயரிய எண்ணங்களின் மாயத்தைச் சொல்லுவதா? கங்குகரையின்றி புரளும் சில சிறு நிமிடங்களில் அடைத்துவைக்கப்பட்டு விடப்பட்டன போல், அவர் முடிக்கப்போகிறார் என்றறியுமுன் ஒரு ஒப்புயர்வற்ற பிரசங்கமாரி செய்துவிடுகிறார் ராதாகிருஷ்ணன்! காந்திஜீ இச்சகாப்தத்தின் அவதார புருஷர்—சத்தியத்தின் மேன்மையையும், நல்லொழுக்கத்தின் உயர்வையும் பற்றிய உபதேசம்—மாளவியாவின், புத்துயிர் அளிக்கும் சிருஷ்டி ஹிந்து யுனிவர்ஸிடி. காலத்தையும், தேசத்தையும் கிழித்து நிற்கும் அதன் பிரகாசம்—இவைகளே இவ்வெள்ளி விழாவின் அற்புதச் சின்னங்கள்—இவ் விருபத்தைந்தாண்டுகளின் நெடும் சின்னங்கள் **"மதுர மனோஹர அதீவ சுந்தரயஹ் சர்வ வித்யாகி ராஜதானி" என்று வித்யாலய கீதத்தை வாத்தியங்கள் முழங்கின—கூட்டம் கலைந்தது. வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது.**



# அரிசி.

[அகில இந்திய கிராமத் தொழிற் சங்கத்தார் வெளியிட்டது.]

ஆ. வே. ஜெயராமன் (தமிழ்படுத்தியவர்)

## அத்தியாயம் 3.

### அரிசி அரைக்கும் தொழில்.

நாட்டில் பலவிடங்களில் சிதறிக்கிடந்து, மனிதர்களுடைய சக்தியினாலும் மிருகங்களுடைய சக்தியினாலும் நடத்தப்படும் கிராமக் கைத்தொழில்களும், குடிசைக் கைத்தொழில்களும், சக்தியினால் ஓடும் பெரிய பெரிய இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, ஒரேயிடத்தில் பெருவாரியாக தொழில் நடத்தும் தொழிற் சாலைகளுடன் போட்டிப்போட முடியாதென்று ஒரு எண்ணம் சிலரிடம் காணப்படுகிறது. நாட்டின் பொருளாதாரப்படி இவ்விருதொழில்களும் சமூகத்துக்கு எவ்வளவுதூரம் நன்மை பயக்குகின்றன என்பதைப் பரிசீலனை செய்வோம்.

முதன்முதலாக நாட்டின் பொருளாதாரம் எவ்விதமிருக்கவேண்டுமென்றால், நாட்டிலுள்ள மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் வேலை கிடைக்கவேண்டும். ஒருதொழில் இயந்திர சாதனங்களின் உதவியைக்கொண்டு செய்து பொருளை மலிவாக்கலாம் என்றெண்ணினால், அதனால் ஒதுக்கித்தள்ளப்பட்ட மனித சக்திக்கு வேறு ஏதாவது ஒரு தொழில் கொடுக்கவேண்டும். நாட்டில் வேலையின்மை இல்லாமல் இருந்தால்தான், அந்நாடு லாபகரமாகத் தொழில் நடத்துகிறதென்று கூறலாம்.

இயந்திரசக்தி உபயோகப்படுத்தவேண்டுமானால், மனிதசக்திக்கு அது உதவியாக இருக்கவேண்டும். அப்படியில்லாமல் மனிதசக்திக்குப் பதிலாக இருக்கவேண்டுமானால் வேலையின்மையை வேறுமார்க்கத்தில் ஒழிக்கவேண்டும். லட்சக்கணக்கான ஜனங்கள் அவர்களுடைய ஒழிந்த நேரங்களைச் செலவிடும் ஓர் தொழிலில் இயந்திர சக்தியை உபயோகப்படுத்தக்கூடாது. அதுதான் நாட்டின் லாபமுங்கூட.

### 1. அரிசிமில்லும் வேலையின்மையும்.

இந்தியாவில் அரிசி அரைப்பது முழுநேர வேலையாகவும், ஒழிந்தநேர வேலையாகவும் கருதப்படுகிறது. வியாபாரத்துக்கென்று அரைக்கப்படுவதை முழுநேர வேலையாகவும், வீட்டுக்கென்று அரைக்கப்படுவதை ஒழிந்தநேர வேலையாகவும் வைத்துக்கொள்ளலாம். ஆனால் அரிசிமில் நாட்டில் நுழைந்ததிலிருந்து இத்தொழிலுக்கு விநாசகாலம் பிடித்துவிட்டது. கீழேகாணும் அட்டவணையிலிருந்து, மில்வந்ததனால் எவ்வளவு மனிதர்கள் வேலையின்றியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

| இடம். | வகை. | அரைபடும் அரிசியின் அளவு (மணங்கு) | வேலை செய்யும் ஆட்கள் | கைக்குத்தலுக்கு வேண்டிய ஆட்கள். |
|---|---|---|---|---|
| பல்ஸார (குஜராத்) | கைக்குத்தல் | 3½ | 5 | 5 |
| பர்டோலி (குஜராத்) | மில் அரைப்பு | 105 | 5 | 150 |
| தம்ஸார் (ம. மா.) | ,, | 280 | 14 | 400 |
| குண்டூர் (ஆந்திரா) | ,, | 360 | 40 | 515 |

இந்த அட்டவணையிலிருந்து அரிசிமில்லுகள் வேலையின்மையை மிகவும் அதிகமாக்குகிறது என்பது தெரிகிறது நெல்லை மில்லில் அரைத்தாலும், கையினால் குத்தினாலும் செலவு ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆதலால் மில்களை ஸ்தாபிதம் செய்து அதனால் வேலையின்மையை உண்டுபண்ணுவதில் எவ்வித நியாயமும் இல்லை.

## 2. அரிசிமில்கள் தேசீய லாபமா?

நாட்டின் லாபத்திற்காக ஒருதொழிலை ஒருஇடத்தில் திரட்டுவதிலும், சொந்த லாபத்திற்காக அதேதொழிலை ஒருஇடத்தில் திரட்டுவதிலுமுள்ள வித்தியாசத்தைக்கவனிப்போம். சில முக்கியமான தொழில்களை ஒரேஇடத்தில் திரட்டி நடத்துவதில் ஏதாவது பயன் ஏற்பட்டால் அவ்விதம் செய்வதுதான் நல்லது. அவைகள் நாட்டின் நன்மைகளுக்காகவே வேலைசெய்யவேண்டும். அடுத்தாற்போல சிலருடைய பைகள் நிரம்ப வேண்டி ஏற்படும் தொழில்கள் நாட்டின் வளர்ச்சிக்கு இடையூறு செய்வதாகும். அரிசிமில்லே இதற்கு ஒரு உதாரணமாகும். தனிப்பட்டவர்களே இந்த அரிசிமில்லினால் லாபமடைகிறார்கள் அதுமட்டுமல்ல, லட்சக்கணக்கானவர்கள் ஒழிந்தவேலையில் செய்ய இருக்கும் தொழில்களையும் அநியாயமாகக்கெடுத்துவிடுகிறார்கள். நாட்டின் முக்கிய உணவான அரிசியின் சாரத்தையும் வீணாக்கிப் பெருத்த நஷ்டத்தை உண்டுபண்ணுகிறார்கள் (இந்தநஷ்டங்களெல்லாம் முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது)

பெரிய தொழில்களை ஒரு இடத்தில் நிர்மாணம் செய்தால் லாபகரமாக இருக்குமென்று பொதுவான அபிப்பிராயமிருக்கலாம். அவ்விதமான தொழில்களுக்கு வெளியூர்களிலிருந்து இயந்திரங்களும்; மற்றபாகங்களும் அதிக செலவில் இறக்குமதி செய்தாகவேண்டும். அதுதவிர பெரும்படியான தொழில்களுக்கு உள்ளூரிலிருக்கும் மூலப்பொருள் போதாமல் அன்னிய நாடுகளிலிருந்தும் வரவழைக்க வேண்டும். பெரிய கட்டிடங்களும், பழுதுபார்க்கும் செலவு, சுங்கவரி, விளம்பரம், மற்றும் பல செலவுகளும் இருக்கின்றன. அடுத்தாற்போல, குடிசைத் தொழில்களில் இவ்விதமான செலவுகள் ஒன்றுமில்லை உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள்களைக்கொண்டு சாமான்கள் செய்து உள்ளூரிலேயே வியாபாரம் செய்யலாம். மற்றதொழில்கள் எவ்விதமிருந்தாலும் அரிசிவிஷயத்தில் குடிசைத் தொழிலான கைக்குத்தலே சிறந்தது.

## 3. உணவும் கைக்குத்தல் அரிசியும்.

கிராமக்கைத்தொழில்களில் உபயோகப்படும் கருவிகள் காலத்திற்கேற்றவாறு மாறுபடும் என்பதில் சந்தேகமேயில்லை. கூடியசீக்கிரம் நம்நாட்டுமக்கள் கைக்குத்தல் அரிசியையே மறுபடியும் உட்கொள்ள ஆரம்பிப்பார்கள். எங்கு பார்த்தாலும் அரிசிமில்கள் ஏராளமாக ஏற்பட்டிருந்தும், குடிசைத்தொழிலில் உபயோகப்படுத்தும் இயந்திரங்கள் அதிக உரம்வாய்ந்ததாக இல்லாமலிருந்தும் நாட்டில் ஜனங்கள் கைக்குத்தல் அரிசியைத்தான் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். இதைக்கீழேகாணும் அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்

| மாகாணங்கள். | கைத்தொழில் அரிசியை உட்கொள்ளும் ஜனத்தொகை (சதவிகிதத்தில்) —1938— |
|---|---|
| பீஹார் | 90 |
| ஆஸாம் | 85 |
| ஐக்கிய மாஹாணங்கள் | 85 |
| ஒரிஸா | 80 |
| வங்காளம் | 75 |
| ஹைதராபாத் | 70 |
| திருவாங்கூர் | 45 |
| சென்னை | 30 |
| பர்மா | 20 |

இதிலிருந்து சென்னையைத்தவிர மற்றவைகள பழங்கால முறைப்படி கைக்குத்தல் அரிசியைத்தான் அதிகம் உபயோகப்படுத்துகின்றன. எனத்தெரிகி

றது. சென்னையில்தான் அரிசிமில்லுக்கு அதிக சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் அரிசிகுத்தும் தொழிலே மறைந்துவிட்டதென்று கூறலாம். சென்னையில் சாகுபடியாகும் அரிசி போதாமல் பர்மாவிலிருந்துகூட இறக்குமதி செய்கிறார்கள். பர்மா அரிசி மில்லரைப்பு அரிசியாகத்தான் இருக்கும் அதுவும் நன்றாகத்தீட்டிய அரிசிதான். தீட்டாமல் இருந்தால் அரிசியில் பூச்சி புழுக்கள் உண்டாகும். இதை உத்தேசித்து அரிசி வியாபாரிகள் அரிசியை அதிகமாகத்தீட்டி ஏற்றுமதி செய்வார்கள் மில்லில் அரிசியை அரைப்பதுமட்டுமல்லாமல், அதிலேயே தீட்டியும் விடுகிறார்கள். அதனால் **வைடமின் பி,** விணாக அழிந்துவிடுகிறது என்று முன்னமேயே அறிந்துகொண்டோம். சென்னையில் மில் அரிசியை அதிகம் உபயோகப்படுத்துவதால் பலர் '**பெரிபெரி**' என்று சொல்லும் படியான முடக்குவாதத்தினால் கஷ்டப்படுகிறார்கள். புழுங்கல் அரிசியை உபயோகப்படுத்தாத ஆந்திரர்கள் தான் இந்த வியாதியினால் அதிகம் துன்பப்படுகிறார்கள்.

### 4. கைக்குத்தலும்-மில்லரைப்பும். செலவின் தாரதம்மியம்.

கைக்குத்தலிலும் மில் அரைப்பிலும் உண்டாகும் செலவைக்கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. குஜராத்தில் 'கோலா' என்னும் ஜாதியார் பெருவாரியாக வியாபாரநிமித்தம் அரிசியைக் கையினால் அரைக்கிறார்கள். ஒருநாளைக்கு ஸ்திரீகளுக்கு 6 அணா கூலி கொடுத்தாலும் கைக்குத்தல் அரிசியின் விலை அங்கே சரசமாக இருப்பதற்கு இதுதான் காரணம்.

**2½ மணு அரிசி அரைப்பதின் செலவு.**

| | தீட்டுதலில்லாமல் | | | தீட்டுதலோடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ | பை. | ரூ. | அ. | பை. | |
| மில் | 0 | 6 | 0 | 0 | 8 | 0 | |
| கைக்குத்தல் | 0 | 6 | 0 | 0 | 15 | 9 | முதல் தீட்டுதல் |
| | | | | 1 | 5 | 0 | இரண்டாவது தீட்டுதல் |

இதனால் தீட்டி மெருகு போடாத அரிசி, மில்லில் அரைத்தாலும், கையினால் குத்தினாலும் செலவு ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆதலால் அரிசியரைத்தலில்மட்டும் மில்லினால் எவ்வித லாபமும் இல்லை. குஜராத்தில் மில்லரைப்பு அதிகமில்லாதற்கு இதுதான் காரணமென்று கூறப்படுகிறது.

மில்லில் 2½மணு அரிசி அரைத்தால் 6-அணா செலவாகிறது. அதற்குமேல் தீட்டுவதற்கு 2-அணாதான் செலவு. அரிசியைத் தீட்டும்பொழுது மில்லின் மற்றொரு பாகம்மட்டும் வேலைசெய்யும். மற்றபடி வேறுவேலை ஒன்றுமில்லை, கைக்குத்தலிலோ, அரைப்பதிலும் தீட்டுவதிலும் ஏற்படும் செலவு தனித்தனிதான். மில்லில் தீட்டும் செலவு அரைக்கும் செலவில் மூன்றில் ஒருபங்கு இருக்கும். ஆனால் கைக்குத்தலிலோ, அரைக்கும் செலவைவிடத் தீட்டும் செலவு மூன்றுபங்கு அதிமாக இருக்கும்.

ஆதலால் மில்லரைப்பில் அதிகமாக அரிசியைத் தீட்டுவதால் செலவு அதிகமாவதில்லை எனத்தெரிகிறது. மத்திய மாகாணத்தில் தம்ஸார் என்னுமிடத்தில் ஜனங்கள் வீட்டிலேயே நெல்லைக்குத்தி

அதைத்தீட்டுவதற்கு மில்லுக்குச்செல்வார்கள். ஆனல் மில்லில் அரைப்பதற்கும், தீட்டுவதற்கும் சேர்த்து ஒரேவிகிதம் போட்டதால், அதிலிருந்து வீட்டில் நெல்குத்தும் வழக்கம் நின்றுவிட்டது.

மில்லரைப்பில் சத்துள்ள பதார்த்தங்கள் மட்டும் அழிந்துபோவதோடுமட்டுமில்லாமல், உமியும், தவிடும் கலப்பதாலும் சிலகஷ்டங்கள் விளைகின்றன. அதுதவிர வண்டிச்சத்தம் வேறு செலவு. உமியை சிலர் வீட்டுக்குக் கொண்டு வருவதில்லை; அதனல் ஏற்படும் பலனையும் அவர்கள் இழந்துவிடுகிருர்கள். எல்லாவற்றையும் கணக்கெடுத்துப் பார்த்தால் மில்லரைப்புச்செலவும், கைக்குத்தல்செலவும் ஒன்றுதான் எனத்தெரிய வரும். மில் குறைந்த விகிதத்தில் அரிசி அரைப்பதால் மில்செலவு அதிகமாயிருக்காதென்று எண்ணுவதாவது தவறு அம்மில்களெல்லாம் நஷ்டத்தில் தான் வேலைசெய்கின்றன. போட்டாபோட்டியின்மேல் அரைப்புக்கூலியைக் குறைப்பது வழக்கமாய்விட்டது. இதன் உண்மையை சென்னை மாகாணத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு சிறிய அரிசி மில்லின் வரவு செலவிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இயந்திரத்தின் விலை, கழிவு மதிப்பு, வட்டி முதலிய செலவுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு நாள் | ரூ. | 0 | 13 | 8 |
| தினசரி செலவுகள் | ரூ. | 3 | 3 | 2 |
| மொத்தச் செலவு | ரூ. | 4 | 0 | 10 |
| ஒரு கலம் அரைப்பதற்கு ஒரு அணு வீதம் 35கலத்திற்கு | ரூ. | 2 | 3 | 0 |
| உமி தவிட்டினல் | ரூ | 0 | 4 | 0 |
| மொத்த வருமானம் | ரூ. | 2 | 7 | 0 |
| ஒரு நாளைக்கு நஷ்டம் | ரூ. | 1 | 9 | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| பழய விகிதப்படி ஒரு கலத்துக்கு 2½ அணு வீதம் அரைப்புக்கூலி வாங்கினல், 35 கலத்துக்கு | ரூ. | 5 | 7 | 6 |
| ஒரு நாள் லாபம் | ரூ. | 1 | 6 | 8 |

## 5. கைக்குத்தலில் சில கஷ்டங்கள்.

நாட்டில் மில்லரிசியைத்தான் அதிகமாக உட்கொள்ளுகிருர்கள், இதற்குக் காரணம் அவர்களுக்கு கைகுத்தல் அரிசி மேன்மை தெரியாததே. அதுதவிர (1) கிராமவாசிகளின் பொருளாதார நெருக்கடி. (2) தற்கால ஸ்திரீகளுக்கு வன்மை இல்லாதிருப்பது. (3) இயற்கையாகவே குறைந்தவிலை சாமான்களை வாங்கும் சுபாவம் முதலியவைகளையும் காரணங்களாகக் கூறலாம்.

கிராமவாசிகளின் பொருளாதார நெருக்கடியைப்பற்றி டாக்டர் பட்டாபி சீதாராமய்யா நேர்த்தியாக பின்வருமாறு கூறுகிருர். "வீட்டில் நெல்லை சேகரித்துக் கொண்டிருந்தால் தான் கைக்குத்தலுக்கு இடந்தரும் கிராமத்தில் இரண்டுமூன்று ஏகரா நிலம் வைத்துக்கொண்டிருப்பவனுக்குக்கூடத் தலைக்குமேலே கடன் இருக்கிறது. வீட்டில் கல்யாணத்தினலோ, ஆடு மாடு வாங்கியோ, வீடுகட்டியோ வியவசாயிகளுக்குக் கடனேறிவிடுகிறது. நெல் சாகுபடி செய்ததும், கடன்காரர்கள் நெல்லை களத்திலிருந்தவாறே எடுத்துக்கொண்டு சென்றுவிடுகிருர்கள். தை மாசி மாதங்களில்தான் அவர்களுக்கு அதிக செலவுவருகிறது. அச்செலவையெல்லாம் நெல்விற்று தீர்க்கவேண்டி இருக்கிறது நெல்லைவிற்றதும் மறுபடியும் கடன் வாங்குகிறுன் அப்படி இருக்கும் பொழுது வீட்டிலேயே நெல் அரைப்பதற்கு நெல்லிருந்தால்தானே"! சொந்த நிலத்தில் விளையும் நெல்லை விற்றுவிட்டு, இரவு சோற்றுக்கு அரிசிவாங்க கடைக்குச் செல்கிருர்கள்!! இது ஏதோ வருமைக்கொடுமையின் காரணமென்றுல், தஞ்சாவூர் பெரிய மிராசுதார்களெல்

லாம் சென்னைப்பட்டணத்தில் நெல்லூர் மில்லரைப்பு அரிசியை வாங்குவதுதான் பெரிய வயிற்றெரிச்சல்!!!

இரண்டாவதாக, வரவர நம்நாட்டு ஸ்திரீகள் சரியான ஊட்டமின்மையால் வலியிழந்துவிடுகிறார்கள் அதனால் அவர்களுக்கு நெல் அரைப்பதென்றால் ஒரு பெருங் கஷ்டமாகத் தோன்றுகிறது. கிராமத்தில் நெல்மெஷின் வந்ததும் 'இது கடவுள்கொடுத்த வரம்'! என்று எண்ணி ஒரு மரக்கால் நெல்லாயிருந்தாலும் மெஷினுக்கு அரைக்கச் சென்று விடுகிறார்கள். புருஷர்கள் நெல் அரைக்கும் தொழிலை ஸ்திரீகளிடம் விடுவதனால்தான் இத்தொல்லைகள். உரலில் நெல்குத்துவது ஸ்திரீகளின் வேலையென்று புருஷர்கள் எண்ணினால் அவர்கள் முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட ஓர் சக்கியில் நெல் அரைக்க ஆரம்பிக்கலாம் அது அவர்களுடைய அந்தஸ்தைத்தாழ்த்திவிடாது. இம்முறையில் கஷ்டமான வேலைகளை புருஷர்கள் எடுத்துக் கொள்ளலாம். இலேசான வேலைகளை ஸ்திரீகள் செய்யலாம். முறத்தினால் அரிசி புடைப்பது கஷ்டமாயிருந்தால் 'புடைக்கும் விசிறியை' உபயோகப்படுத்திக்கொள்ளலாம்

மூன்றாவதாக, ஒரேயளவு நெல்லை மெஷினில் அரைப்பதாலும், கையால் அரைப்பதாலும் கூலியில் 2½ அணாவிலிருந்து 4½ அணா வித்தியாசம் இருக்கிறது. ஒரு மனிதனுக்கு ஒருமாதத்துக்கு அரை மணங்கு அரிசி செலவழிகிறது. மில்லரிசியை உண்பதைவிட கைக்குத்தலரிசியை உண்டால்அவனுக்கு மாதத்தில் 2 அணா செலவு அதிகமாகிறது சராசரியாக ஓர் குடும்பத்தில், நால்வர் இருந்தால் அவர்களுக்கு மாதம் 8 அணா செலவுதான் அதிகமாகிறது. ஆனால் கைக்குத்சலரிசியினால் கிடைக்கும் உணவின் மதிப்புக்கு ஒருவன் இந்த செலவை பொருட்படுத்த வேண்டியதில்லை. தவிர, மில்லரிசி உட்கொள்ளும் அளவில் குறைவாகத்தான் இருக்கும் கைக்குத்தல்அரிசி உட்கொள்ளும் அளவு. ஏழைக்கு இவ்வளவுதூரம் சிந்தனை செய்ய இடமிருக்கிறதா? கைக்குத்தலரிசியில் சத்துணவு அதிகமிருக்கிறது. அதுவுந்தவிர கணக்குப்பார்த்தால் விலையும் சரசமாக இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியப் போகிறதா? மெஷின் அரிசியிலிருந்து கைக்குத்தலரிசியின் தராதரத்தை அறிந்துகொள்ளவே நம்நாட்டு மக்களுக்குக் கல்வி புகட்ட வேண்டிய அவசியம்ஏற்பட்டிருக்கிறது

---




## இடம் மாற்றம்.

தற்கால யுத்த நிலைமையினால் பாரதமணி காரியாலயம் மயிலாப்பூரிலிருந்து மாயவரம் மகாதானத்தெரு 43, நம்பர் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

மானேஜர்.




## நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(ஸ்தாபிதம் 1906) (தலைமை ஆபீஸ்:—கல்கத்தா)

—: சந்தோஷச் செய்தி :—

எங்கள் **லைப் பாலிஸிகள்** யுத்த விபத்துக்களையும் உட்படுத்தும் என்பதை எங்கள் பாலிஸி ஹோல்டர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். அதற்காக அதிகக் கட்டணம் ஒன்றும் இல்லை. மேலும், தற்பொழுது புதிதாக வழங்கப்படும் பாலிஸிகளுக்கும், எவ்வித பிரத்தியேகக் கட்டணமின்றி, யுத்த விபத்துக்களையும் உட்படுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிராஞ்சு ஆபீஸ் :

**நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,**

58, கோபதிநாராயண ஸ்வாமிசெட்டிரோடு, தியாகராயநகர், மதருஸ்.

லைப் ஆபீஸ் : 171, புதுத்தெரு, மதுரை.

லைப் ஆபீஸ் : 5, கெர்பகோடாரோட், பெங்களூர்.

# தென்னிந்திய பிரமுகர்கள்-6.

## நிதி மந்திரியின் செவிலித்தாய்.

**(காலஞ்சென்ற ஏ. வி. வி. அய்யர்.)**

**வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.**

1923-ம் வருஷம் மார்ச்சு மாதம் 5-ந் தேதி இந்திய சர்க்காரின் மத்திய சட்ட சபையில் விவாதம் நடந்துகொண்டிருந்தது. சர்க்காரின் நிதி மந்திரி விவாதத்திற்கு விடுத்த வரவு செலவு திட்டந்தான் அங்கு நடந்த சர்ச்சைக்கு இலக்கான விஷயம். தேசியவாதிகள் வரவு செலவு திட்டம் வகுப்பதில் இந் நாட்டு அந்நிய சர்க்கார் கைக்கொள்ளும் முறை முற்றிலும் பிசகு என்றும், அவர்கள் வரவையும் சிலவையும் சரிக்கட்டுவதற்காகப் போடும் வரிகள் தவறான வழியில் அமைந்துள்ளன என்றும் எடுத்துக் காட்டினர். அப்படிப் பேசியவரில் ஒருவர் 'பதாம்ஜிகின் வாலா' என்னும் பார்ஸிக்காரர். அன்று அவர் இதைக்குறித்துப்பேசியது வருமாறு:—

"நம் தேசத்தில் வரவு சிலவு திட்டம் அமைக்கப்படுவதே ஒரு தனிமாதிரி. அதை அமைப்பதற்குமுன் நிதி மந்திரி கையில் ஒரு நீலநிற பென்ஸிலை வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொள்வார். அவருக்கு ஒருபுறம் 'குக்' என்பவர் இருப்பார். மற்றொருபுறம் 'அய்யர்' காணப்படுவார். எதிரில் 'ஸிம்' என்பவர். நிதி மந்திரியானவர் அவர்களை நோக்கி,

'இவர்கட்கு இந்த வருஷம் சிலவிற்கு வரிகளிலிருந்து எவ்வளவு பணம் வேண்டுமாம்? என்பார்.

'எண்பது கோடி போதும்' என்ற பதில் வரும்.

'போனவருஷம் வரிகளிலிருந்து எவ்வளவு வரும்படி கிடைத்தது?' 'அறுபத்துநான்குகோடி'. 'சரி, உங்கள் வரிவிகிதப் புத்தகங்களை எடுத்துக் கொடுங்கள்'.

மற்ற வேலையெல்லாம் அந்நீலநிறப் பென்ஸில் செய்துவிடும். இங்குமங்கும் பென்ஸில் அடித்தும் கூட்டியும் வேலை செய்கையில் இடையிடையே,

'வருமான வரியில் நூற்றுக்கு பதினொரு விகிதம் அதிகம் இருக்கட்டுமே—இல்லை—போதாது போலிருக்கிறது. பதினைந்து விகிதமாக்குகிறேன். அப்பொழுது இரண்டுகோடி ரூபாய்கள் கிடைத்துவிடும். என்ன சொல்லுகிறீர்கள்?' என்று இவர் கேட்பது, அதற்கு உடனிருப்பவர்கள், 'ஆமாம்', என்று தலையாட்டுவது, இவைபோன்ற சம்பாஷணைகள் நடைபெறும்.

இதேமாதிரியேதான் மற்ற வரிகளின் கதியும். இப்புதிய வரிகளை விதித்தால் அதைச் செலுத்தவேண்டியவர்கள் அச்சுமையைத் தாங்கமுடியுமா என்பதை இவர்கள் கருதுவதே கிடையாது. இம்மாதிரி வேறு ஒரு தேசத்திலும் வருஷாந்தர வரவு சிலவு திட்டத்தை வகுக்க மாட்டார்கள்."

மேற்கூறிய நிகழ்ச்சியில் நிதிமந்திரிக்கு உதவியாய் உடனிருந்து வேலை செய்தவர்களுள் ஒருவராகக் குறிக்கப்பட்டவர்தான் காலஞ்சென்ற ஏ. வி. வி. அய்யர் என்பவர். நிதிமந்திரிகளுக்கு இவர் இயற்றிய உதவி எவ்வளவு இன்றியமையாததாயிருந்தது என்பதைத் தெரிவிக்க இன்னொரு சம்பவமும் குறிக்கப்படுகிறது. சட்டசபையில் வேறொரு பேச்சில்,

"நம் நிதிமந்திரிக்கு என்ன குறைவு. ஆங்கில தேசத்தவரான அவருக்கு இவ்வூருக்கு வந்திருக்கும் அத்தேசத்தவர்கட்கு என்ன முக்கியமாய் இங்கு வேண்டுமோ அவை அதிகார ரீதியிலும் கிடைத்துவிட்டன. வீட்டிலிருப்பதுபோல் ஆபீஸிலும் அவருக்கு ஒரு 'குக்கும்' (=சமயற்காரனும்) ஒரு 'ஆயா' வும் (=செவிலித்தாயும்—குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக—ஆங்கிலேயர் 'அய்யர்' என்னும் பதத்தை 'ஆயா' என்பதுபோல் உச்சரிப்பதை பேசியவர் இங்கு குறித்திருக்கிறார்) கிடைத்துவிட்டனர்" என்று ஒருவர் சொன்னார். இப்பேச்சில் குறிப்பிடப்பட்ட 'அய்யரும்' இவர்தான்.

இவருடைய முழுப்பெயர் ஏ. வி. வேங்கடரமண அய்யர் என்பது. தென்னிந்தியப்பெயர்கள் வடநாடுகளில் மிகவும் நீண்டவை, உச்சரிப்பதற்குக் கடினமானவை என்று பிறர் சொல்லிவரும் புகாரை நீக்குவதற்காகவோஎன்னவோ தென்னிந்தியர்களில் பலர் வடக்கே வந்துவிட்டால் தாங்கள் பெயர்களைக் குறுக்கிக்கொண்டுவிடுவது என்று ஒரு வழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கின்றனர். அதற்கிணங்க இவர் பெயரும் ஏ. வி. வி. அய்யர் என்றாயிற்று. தமிழில் இது ஆ. வே. வேங்கடரமண அய்யர் என்று அமையவேண்டியது. ஏனெனில், இவருடைய சொந்த ஊர் தென்னார்க்காடு ஜில்லாவில் திருக்கோயிலூர் தாலுகாவிலுள்ள ஆயந்தூர் என்னும் குக்கிராமம். இவர் தந்தையாரின் பெயர் வேதாசலமய்யர் என்பது. அவ்வூரில் இவர் சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் தோன்றினார். இவர் ஸ்மார்த்த பிராமணருள் வடமர் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்.

இவருடைய பெற்றோர்கள் மிகவும் எளியநிலையில் இருந்தவர்கள். அவர்களுடைய ஜீவனம் விவசாயம். நிலத்திலிருந்து கிடைத்த வருவாய் குடும்பச் செலவிற்குப் போதாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இவருடைய சிறுபிராயத்தில் இவரைப் பள்ளிக்கூடத்தில் வைப்பதற்கு இருமுறை நல்ல நாள் பார்த்துவைத்தும், அதற்குப் போதுமான செலவுப்பணம் கையிலில்லாமையால் அச்சடங்கை ஒத்திவைக்க வேண்டி வந்ததாம். கடைசியில் மூன்றும் முறையாக அக்ஷராப்பியாசத்திற்காக நாள் வைக்கையிலும் நெருங்கிய ஓர் உறவினரிடம் கடன்வாங்கித்தான் இதை நடத்தவேண்டியிருந்ததாம்.

இவருடைய ஆரம்பப்படிப்பு மஞ்சக்குப்பத்திலுள்ள ஸெயின்ட் ஜோஸப் பள்ளிக்கூடத்திலும் காலேஜிலும் நடந்தது. உயர்தரப்படிப்பு திருச்சிராப்பள்ளியிலுள்ள ஸெயின்ட் ஜோஸப் காலேஜில் நடந்தேறியது. இவர் படிக்கையில் உபகாரச்சம்பளம் பெற்றார்.

படிப்பு முடிந்தவுடன் சென்னை அகௌண்டண்ட் ஜெனரல் ஆபீஸில் முதன் முதலில் சம்பளமின்றி வேலை பழகுபவராக அமர்ந்தார். அடுத்தபடியாக இவருக்கு மாதம் ரூ. 15-ல் ஒரு குமாஸ்தாவேலை அதே ஆபீஸிலேயே போட்டுக்கொடுத்தனர். அவ்விலாகாவில் கீழ் சிப்பந்திகளின் வேலைகளை மேல்பார்வை பார்க்கும் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக ஒரு பரீக்ஷையுண்டு. அப்பொழுது அது கல்கத்தாவிலிருந்த மத்திய சர்க்காரின் தலைமை ஆபீஸிலிருந்து நடத்தப்பட்டது. நாளடைவில் அப்பரீக்ஷையில் இவர் தேறினார். அத்துடன் இவர் தோன்றிய வருஷத்தில் இவர் கொடுத்த விடைகளைக்கண்டு மெச்சி இவரைக் கல்கத்தாவில் மத்திய சர்க்காரின் நிதிஇலாகாவில் அதிகச் சம்பளமுள்ள ஒரு பதவிக்கு அழைத்தனர். முதன்முதலில் வடநாட்டிற்குச் செல்லத் தயங்கிய இவர் கடைசியில் அதை ஒப்புக்கொண்டார். அதுமுதல் அவ்விலாகாவில் இவர் நல்லபேரும் மதிப்பும் சம்பாதித்துக்கொண்டதுடன் பெருவாரியான சம்பளமுள்ள பல பொறுப்புள்ள பதவிகளையும் வகித்தார். மத்திய நிதி இலாகாவின் உயர்தரப்பதவிகள் அடங்கிய "இன்டியன் ஆடிட் அண்டு அகௌண்ட்ஸ் சர்வீஸ்" என்பதற்கு

போட்டிப் பரீக்ஷையின் மூலம் ஆள்களைத் தேர்ந்தெடுப்பதுடன் அவ்விலாகாவிலேயே கீழ்ச்சிப்பந்திகளுக்குள் திறமையுள்ளவர்களைப் பிரமோஷன் செய்வதுமுண்டு. அத்தகைய பிரமோஷன் அடைந்தவர்களுள் ஒருவர் நம் அய்யர்.

நிதிஇலாகாவில் பல தென்னிந்தியர்கள் நிபுணர்கள் எனப் பெயரெடுத்திருக்கின்றனர். இவர்களுள் அய்யர் பிரசித்தமான ஒருவர். இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்காக இந்நாட்டிற்கு வந்த ஸைமன் தூதுகோஷ்டியாரின் அறிக்கையில் நிதிஇலாகாவிற்குத் தென்னிந்தியர்களையே நியமிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அய்யர் போன்றவர்களின் வேலைத்திறமைதான் இவ்வபிப்பிராயத்திற்குக் காரணம் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இவருடைய வேலைத்திறமையை இவருடன் நெருங்கிப்பழகிய பலர் மெச்சநான் கேட்டிருக்கிறேன். அவ்விலாகாவில் ஸி. ஐ. இ. என்னும் ஆங்கிலப் பட்டத்தை அடைந்த சில இந்தியர்களுள் இவர் ஒருவர். அதிலும், வரவு செலவுதிட்ட சம்பந்தமான வேலையிலும் (Budget) பொக்கிஷம், நாணயம் இவை சம்பந்தமான வேலையிலும் (Currency) இவர் நிகரற்ற திறமை வாய்ந்தவரெனப் பெயர்பெற்றவர். வரவு செலவு திட்ட சம்பந்தமாய் இவர்செய்த உதவியைப் புகழ்ந்தும் நன்றிபாராட்டியும் பல நிதி மெம்பர்கள் (அதாவது 'மந்திரிகள்'-குடிகளால் தேர்ந்தெடுக்கப்படாமல் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்களாதலால் 'மெம்பர்கள்' என்று குறிக்கப்படுபவர்கள்) இவரைக் கடிதங்கள்மூலம் பாராட்டியிருக்கின்றனர் என்று பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். எனவே நிதிமந்திரிகள் பலருக்கு இவர் ஓர் செவிலித்தாய்போல் உதவினார் என்றாலும் அது மிகையாகாது. ஆனால் யானைக்கும் அடிசறுக்கும் என்பர். இவ்வளவு திறமையுள்ள இவர் போட்டமைத்த புள்ளியிலும் ஒருமுறை தவறு ஏற்பட்டதாம். அதைப்பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்திலிருந்து கிளம்பிய விசாரணையின்போது இந்திய சர்க்கார் அய்யரின் வேலையைப்பற்றிப் புகழ்ந்து, இத்தவறு இவருடைய வேலையில் தோன்றியது ஓர் துர்அதிருஷ்டமே யென்று அபிப்ராயம் தெரிவித்தனராம்.

தன் அதிகாரதோரணையில் இவர் மத்தியசட்டசபையில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டுச் சிலவருஷங்கள் இப்பதவியையும் வகித்தார்.

இவர் பார்த்த உத்தியோகங்களுள் முக்கியமானவை பம்பாயிலும் கல்கத்தாவிலும் நாணய இலாகாவின் உபதலைவர் பதவிகள், மத்தியசர்க்காரின் பொக்கிஷ இலாகாவின் உதவி காரியதரிசி முதலியவை. சிறிதுகாலம் இவர் நாணய இலாகாவின் தலைவராக இருக்கையில் சில ஆயிரம் ரூபாய் நோட்டுகளில் சர்க்காரின் சார்பாகக் கையெழுத்திட்டார். இவருக்கு முன்பும் பின்பும் வேறு ஒரு இந்தியருக்கும் சர்க்கார் பிரதிநிதி யென்னும் தோரணையில் நோட்டுகளில் கையெழுத்திடும் பாக்கியம் கிட்டவில்லை.

சுமார் பதினாறு வருஷங்கட்குமுன் மத்திய சர்க்கார் இந்திய நாணய விஷயமாய் ஒரு விசாரணைக்கமிட்டி ஏற்படுத்தினர். அதற்குத்தலைவர் ஸர். ஹில்டன் யங் என்னும் நிதிநிபுணர். அவருடைய பரிசீலனைக்கு விடப்பட்ட விஷயங்களுள் முக்கியமானது இங்கிலாந்தின் நாணயமான 'பவுண்டு' என்பதற்கும் இந்தியாவின் நாணயமான 'ரூபாய்'க்கும் ஓர் பரஸ்பர மதிப்பு ஏற்படுத்துவதென்பதே. அதாவது ஒரு 'பவுண்டு' நாணயமாற்றலுக்கு எவ்வளவு ரூபாய்க் குச்சமனைக் கருதப்படவேண்டுமென்பது. இக்கமிட்டிக்கு உப காரியதரிசியாக நம் அய்யர் நியமிக்கப்பட்டார். இவ்விசாரணையின் முற்பகுதி இந்த தேசத்திலும் பிற்பகுதி இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் நடப்பதாக ஏற்பாடாயிருந்தது. முற்பகுதி முழுவதிலும் அக்கமிட்டிக்குக் காரியதரிசியாய் உதவிய இவர் அப்பகுதி முடிந்து எல்லோரும் இங்கிலாந்திற்குக் கப்பலேருந்தருவாயில் நோயுற்றார். அந்நோயிலிருந்து இவர்

மீளவே யில்லையாகையால் கமிட்டியின் பிற்பகுதியில் இவர் வேலைசெய்ய முடியாமற்போயிற்று. அவ்வேலை முழுவதையும் இவர் செய்திருந்தாரானால் அது முடிந்ததும் அச்சமயம் இங்கு ஸ்தாபனம் செய்யப்படுவதாயிருந்த இந்தியன் ரிசர்வ் பாங்கி யென்னும் சர்க்கார் பொக்கிஷசாலையில் இவர் ஓர் பொறுப்புள்ள பெரும்பதவியை வகித்திருப்பார் என்று எண்ணப்பட்டது. ஆனால் நோய் வந்து குறுக்கிட்டதால் எல்லோரும் எதிர்பார்த்த இப்பாக்கியம் இவருக்குக் கிடைக்கவில்லை. நோயுற்ற சில மாதங்கட்குப் பின்னர் வியாதி குணமடைந்து வருவதாக எண்ண இடமிருந்தது. ஆனால் திடீரென்று ஒருநாள்—1926—செப்டம்பரில்—சென்னையில் இவர் மாரடைப்பினால் உயிர் துறந்தார்.

இவர் நிறத்தில் சற்றுக் கருமைகலந்த மாநிறமுள்ளவர். அதிக உயரமில்லை, அதிக குள்ளமுமில்லை. அதேமாதிரியே நடுத்தரப்பருமனுள்ள தேகம் படைத்தவர். கண்களில்மட்டும் ஓர் கூர்மையான பார்வை யுண்டு.

குணத்தில் இவர் பரமசாது. தோற்றத்திலும் பசுபோன்றவர். அதிக கலகலப்புடன் பேசமாட்டார். இவர் ஆயுள் முழுவதும் வடஇந்தியாவிலேயே இருந்தபடியால் இவருடைய உறவினர் கூட இவருடன் அதிகமாக நெருங்கிப் பழக இயலவில்லை. இவருக்கு ஒன்றுவிட்ட மருமானான நானே இவரை என் வாழ்க்கையில் இருமுறைதான் சந்தித்திருக்கிறேன். இவர் உறவினர்களாகிய நாங்கள் இவரைப் பார்க்கப் போகும் பொழுது சில சிறு வாக்கியங்களினாலோ, சொற்களினாலோ, குசலபிரச்னம் செய்வார். அவ்வளவுதான். பின்பு நிகழும் சம்பாஷணை மௌனம் நிறைந்ததாயிருக்கும். வந்திருப்போர் கேட்கும் கேள்விகளுக்கு சிக்கனமான பதில்கள் கிடைக்கும். சர்க்கார் சிலவுகளில் சிக்கனத்தைப் புகுத்தும் தொழிலையுடைய இலாகாவின் தொடர்புதான் இவர் சம்பாஷணையிலும் காட்டிய சிக்கனத்திற்கு காரணம் போலும்!

அதிக கலகலப்பில்லாதிருந்தும் இவரிடம் பிறருக்கு அளவில்லாத மதிப்பு இருந்தது. கல்கத்தாவில் ஒருசமயம் பல தென்னிந்தியப் பிரமுகர்கள் கூடியிருக்கையில் அங்கு ஏதோ ஒரு காரியத்தை முன்னிட்டு இவர் போய்ச் சேர்ந்தாராம். அங்கிருந்தவர்கள் பலருக்கு அதிகார தோரணையில் இவருடன் ஒருவித சம்பந்தமும் கிடையாதாம். அப்படியிருந்தும் இவர் நுழைந்ததும், எல்லோரும் எழுந்திருந்து தங்கள் சம்பாஷணைகளை நிறுத்திக்கொண்டு மரியாதையுடன் இவரை வரவேற்றினார்களாம். இதை நான் அச்சமயம் அங்கிருந்த ஒருவர் சொல்லிக்கேட்டேன். பிறருக்கு இவரிடமிருந்த மரியாதையை இச்சம்பவம் நன்கு எடுத்து விளக்குகிறது.

பிறருக்கு உதவும் தன்மை இவருக்கு உண்டு. இவர் உறவினர்களுள் பல இளைஞர்களின் படிப்பிற்கு மாதாமாதம் பணமனுப்பி இவர் உதவியிருக்கிறார். ஆதியில் எளிமையின் கொடுமையால் தான் அனுபவித்த கஷ்டங்களை மறக்காமல் இம்மாதிரி இவர் பிறருக்குதவ முன்வந்தது மெச்சத்தக்கது.

இவருடைய உதாரகுணத்திற்கு வேறொரு திருஷ்டாந்தத்தையும் இங்கு குறிப்பிடலாம். இவருடைய உறவினர் ஒருவருக்கு ஒருசமயம் இவர் முன்னூறு ரூபாய்கள் கொடுத்து உதவியிருந்தார். பணம் கடனாகத்தான் கொடுக்கப்பட்டது. எனினும் பணம் வாங்கியவர் பின்பு அதைத்திருப்பிக் கொடுக்க இயலாமல் துன்புறுகையில், இவர் தானாகவே அவருக்கு ஒரு கடிதம் எழுதி அப்பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டாமென்றும் அம்மாதிரி நேர்ந்ததற்குக் கவலைப்பட வேண்டாமென்றும் கடிதம் எழுதினார்.

செய்ந்நன்றி மறவாதல் என்னும் குணம் இவரிடம் பரிபூரணமாய்க்காணப்பட்டது. இளமையில் இவருக்கும் இவர் குடும்பத்திற்கும் இவருடைய அம்மான் ஒருவர் உதவினார். இவர் ஆயுள் உள்ள

வரையிலும் அவருடைய குடும்பத்தா ருக்குத் தன்னாலான உதவியை இவர் செய்துவந்தார்.

கஷ்டம்வந்தால் அதை அனுபவிக்கத் தக்க மனோதைரியம் இவருக்கிருந்தது. ஒருமுறை இவருடைய நண்பர்களில் ஒருவரும் சென்னை அகௌண்டன்ட் ஜெனரல் ஆபீஸில் வேலைபார்த்து வந்த வருமான ஒருவர் பலரிடம் நோட்டம் பார்ப்பதற்காக வைரநகைகளை வாங்கி அவைகளைத் தன் சிலவிற்கு உபயோ கித்து, பிறகு அதனால் தனக்குவந்த அவ மானத்தைத் தாங்கமுடியாமல் எட்டிக் காய் விஷத்தைவுண்டு தற்கொலைசெய்து கொண்டார். இதனால் வைர ஆபரணத் தை இழந்தவர்களுள் இவரும் ஒருவர். இவருக்கு இதன்பொருட்டு வந்தநஷ்டம் ஐயாயிரம் ரூபாய்கள். இதைப்பற்றித் தகவல் கிடைத்ததும் இவருடைய குடும்பத்தினர் பெருத்த மனக்கலக்கம் அடைந்து அதை வாய்விட்டும் காட்டி விட்டனர். அதை வீட்டின் மாடியி லிருந்து கேட்ட இவர் கீழே இறங்கி வந்து,

"இப்பணம் நம்முடையதன்று என்று எண்ணி இதை மறந்துவிடுங்கள். வீணாக இதைக்குறித்து மனதைப் புண்படுத்திக் கொள்ளாதீர்கள்"

என்று அவர்களைநோக்கி அமைதியுடன் சமாதானம் சொன்னார். இது இவரு டைய திடச்சித்தத்தை நன்கு விளக்கு கிறது.

இவர் கையெழுத்து இங்கிலீஷிலுஞ் சரி, தமிழிலுஞ்சரி பார்க்க மிகவும் அழகாயிருக்கும். கண்ணில் ஒற்றிக் கொள்ளச்சொல்லும். என் சிறுவயதி லேயே இவர் எங்களுக்கு எழுதிய கடி தங்களிலுள்ள எழுத்துக்கள் என் மனதைக்கவர்ந்தன. சதா புள்ளிவிவரங் களுடனேயே உறவாடும் இவர் வேலை யில் இவரடைந்த பெரும் புகழுக்கு இதுவும் ஒரு சிறந்த சாதகமாய் அமைந் திருக்க வேண்டுமென்று நம்புகிறேன்.

வட இந்தியாவில் இவர் இருந்த நகரங் களிலுள்ள தென்னிந்தியர்கட்கு இவர் சமூகத்தொண்டும் இயற்றியிருக்கிறார். கல்கத்தாவில் இவர் இருந்த சமயத்தில் சில தென்னிந்தியர்களே அங்குண்டு. அவர்களுக்குள்ளும் ஒரு சங்கத்தை ஏற் படுத்தி அதற்கு இவர் தலைவராயிருந் தார். இவர் பின்பு டெல்லி, சிம்லாவுக்கு மாற்றப்பட்டபோதிலும் அந்த ஊர்களி லுள்ள தென்னிந்திய சங்கங்களுக்குத் தலைவராகவுமிருந்தார்.






## திருத்தம்.

"பாரதமணி" பங்குனி இதழின் (March 1942) *111*-ம் பக்கத்தில் "சென்னை ரேடியோ" என்றிருப்பதை "திருச்சி ரேடியோ" என்று வாசிக்கவும்.

# விஞ்ஞானமும் சமூகவியலும்.

(த . பு. நவநீதகிருஷ்ணன், அண்ணாமலைநகர்.)

நல்வாழ்க்கையே மக்களின் சீரிய நோக்கமாம். இவ்வாழ்க்கையைப் பெறும் முயற்சிகளினின்றெழுந்ததே நாகரீகமாம். தொடக்கத்தில், மூப்பு இறப்பு இவற்றைத்தவிர்க்க மக்கள் மந்திரத்தை நாடினர். பின், மூப்பும் இறப்பும் தவிர்க்க இயலாதவை யென்றுணர்ந்தனர். அவை வருமுன் நல்வாழ்க்கையைப் பெறுவதையே தம் நோக்கமாய் கொண்டனர், தமக்குள் ஒரு தலைவனைக்கொண்டு, அவனை அரசனென்றழைத்துத் தம்வாழ்க்கைக்கதிபதியாக்கினர். பின்னர், அரசர் குடிகள் நல்வாழ்க்கையைப்பேணும் பணியை செவ்வனே யாற்றாது போயினர். அதைக் கண்டு அவனிலும் உயர்ந்த இறைவன் உண்டு என்றும், அவ்விறையைத் தொழுவதால் எல்லா நலங்களும் பெறலாம் என்னும் கருத்து மக்கள் உள்ளத்தில் வலிவுற்றது. இதன் விளைவாய் சமயம் தோன்றியது சிந்தனை முதிர்ந்தது தொழின்முறைகள் சிறப்புற்றன தொழின்முறைத்திறனும் கற்பனையின் ஆற்றலும் கலந்த சிந்தனையால் விஞ்ஞானம் எழுந்தது. தொழிற்கலைகளும் விஞ்ஞானமும் ஒருங்கே வளர்ச்சியடைந்தன. இக்காலத்து, விஞ்ஞானம் விரவிய வாழ்க்கை பரிணமித்தது. பல நூற்றாண்டுகளாய் விஞ்ஞானம் பரவியிருந்தும், மந்திரத்தின் மகிமைமட்டும் மறையவில்லை மந்திரத்தால் நல்வாழ்க்கையைப் பெறலாம் என்று எண்ணுபவர் இன்றும் இருக்கின்றனர். எனினும் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாதது பொருளே என்பதை யாவரும் உணர்ந்துள்ளனர். இக்காலத்துத் தெய்வம் பணமே யென்று எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதே. நாகரீக முதிர்ச்சி பொருள் பெருக்கத்துடன் உறவுகொண்டுள்ளது. செல்வம் குன்றி, பொருள் வளமில்லா நாட்டினரே, மறுமையைப் பற்றியும் பொருள்பாற்படாத ஆவியைப்பற்றியும் அதிகமாய்ப் பேசுகின்றனர். செல்வம் பெற்ற நாட்டினர் ஆவியைப்பற்றி கவலை கொள்வதில்லை.

ஆறாயிரம் ஆண்டிற்குமுன் மக்கள் பரம்பொருளை வழிபட்டனர். இன்று, இரையைத்தரும் பணியை தொழுகின்றனர் இக்காலத்து மக்கள், மந்திரத்தால் மாங்கனி விழாது எனும் உண்மையை நன்குணர்ந்துள்ளனர். தாம் பெற்ற பணியைச் செவ்வனேசெய்து, பொருளீட்டி மேலும் மேலும் நலங்களைப் பெறுதலே நல்வாழ்க்கை என்பதை எல்லோரும் நன்குணர்ந்துள்ளனர். மக்கள் உள்ளத்தின் அடிப்படையான பான்மை இனவியல்பினது. அது உறுப்புக்களின் வளர்ச்சியையும் அறிவின் ஆற்றலையும் பற்றிநிற்கும். இனவியலான வளர்ச்சியினாலேயே உள்ளப்பாங்கு வளர்ச்சியடையும். இவ்வாறான வளர்ச்சிக்கான காரணம்யாது என அறிய இயலாது இவ்வகையான வளர்ச்சி சிறிது சிறிதாகவே ஏற்படும். எனவே, தம்மைவிட உயர்ந்தவகையான இனத்தைத் தோற்றுவிக்கும் வழிகளை மக்கள் இன்னும் அறியவில்லை. ஆதலின் இப்பொழுதுள்ள மக்களைக்கொண்டே சிறந்த விளைவுகளைப் பெறவேண்டும். பொறியியல் முறைகளைக்கொண்டு சிறந்த பொருள்களை ஏராளமாய் உண்டாக்கும் வழியை மக்கள் இப்பொழுது நன்கறிந்துள்ளனர். வாழ்க்கையைச் சிறப்பிக்கும் பலபொருள்களையும் பெருவாரியாய் உண்டாக்குதலே நமது முதற்பணியாம். அதன்பின் அப்பொருள்களைக் கொண்டு எல்லோரும் நன்மையடையும் பங்கிடும் முறைகளைப்பற்றிக் கருதவேண்டும். இவற்றிற்கேதுவான அரசியல்முறை ஏற்படவேண்டும். சென்ற

காலங்களில், பேருழைப்பினாலேயே, பலபொருள்களை மக்கள் பெற்றனர். ஆதலின் பலர் பல பொருள்களின்றி வாழநேர்ந்தது. மக்களிடை பொருள் பாற்பட்ட ஏற்றத்தாழ்வையுண்டாக்கும் அரசியல்முறை யேற்றதாயிருந்தது. பலரில் சிலர்மட்டுமே எல்லாவசதிகள் பெறவும், அநேகர் அவையின்றிக் காலங்கழிக்கவும் நேர்ந்தது. இதனால், அந்நிலைமையே இயல்பானது என்பதை நிலைநாட்டும் தத்துவம் தோன்றியது. எல்லோரும் பலவகையான பொருள்களையும் பெறும்படிசெய்ய இயன்ற இக்காலத்தில் அத்தத்துவத்திற்கு இடமில்லை பொருளை உண்டாக்கல், உண்டாக்கினவற்றை நன்முறையில் பங்கிடுதல் என்றவற்றைத் திட்டமான அறமுறையில் நிறுவதற்கேற்ற சமூக அமைப்பு யாது என்பதே நம்சிந்தனைக்குகந்ததொன்றும். பொருள் படைத்தோர் மேலும் செல்வோராதற்கும், பொருளற்றோர் இன்னும் கீழான இழிநிலையடைந்து வறுமையால் பீடிக்கப்பட்டு வாடுதற்கும் வாய்ப்பளிக்கும் நிலைமை மறையவேண்டும். இக்காலத்தில் அளவற்ற பொருள்கள் ஆக்கப்பட்டு, பயனற்றுக்கிடக்கின்றன; முன்னேற்றம் தடைபடுகின்றது. உலகில் இன்னல்களும், கலகங்களும், போர்களும் நிலையாமையும் அதிகரிக்கின்றன. பொருளாக்க முறைகள் சிறத்தலினால், முன்னேற்றம் ஏற்படுகின்றது. புது புது முறைகளால் பெறப்படும் பொருள்கள் பலருக்கும் பயன்படுமாறு செய்வதினாலே மேலும் மேலும் முன்னேற்றம் உண்டாகும். பொருள் ஆக்க முறைகளைப்பற்றியும் அவற்றிற்கடிப்படையான விஞ்ஞானீயக கருத்துக்களைப் பற்றியும் அறியாதவர் சமூகம் முன்னேறாதவாறு இடர்செய்கின்றனர். தொழிலாளிகளின் பேருழைப்பினால் உண்டாக்கப்பட்ட பொருள்கள், தொழின் முறையறியாத சிலரின் ஆட்சிக்குட்பட்டுள்ளன. இம்முறையைத் தாங்கி நிற்கும் சட்டங்கள் ஒழியவேண்டும். மக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருக்கும் சமூக அமைப்பு முறை அழியவேண்டும்.

பண்டைக்காலத்து மக்கள் சமூகங்களில் மந்திரவாதிகள் முதல் இடத்தைப் பெற்றிருந்தனர். மந்திரத்தினால் எதையும் பெறலாம் என்ற எண்ணம் பரவியிருந்த அக்காலத்தில் அவ்வாறான நிலைமையிருந்திருத்தல் இயல்பேயாம். பல நூற்றாண்டுகளாய் அரசியல் வகுப்பினரெனும் உயர்குடி மக்களின் ஆட்சி ஓங்கிவந்தது. ஆள அறிந்தவர் சிலமரபுகளில் மட்டுமே தோன்றுவர் என்றும், அவ்வாறானவர் ஆட்சிமுறைகளில் சிறந்த பயிற்சிபெற்றபின் ஆட்சியின்பாற்பட்ட பலவினைகளையாற்றிவந்தனர் என்றும் மக்கள் எண்ணிவந்தனர். பாமரமக்கள், ஆட்சிமுறைகளில் தலையிடலாகாது என்றும் கருகப்பட்டுவந்தது. பிற்காலத்தில் வணிகத்தாலும், பொறியியல் முறைகளாலும் பொருளீட்டிய செல்வர் ஓங்கினர். இவர்களும் ஆட்சிவகுப்பினரும் சேர்ந்து இக்காலத்து அரசியல் பொறுப்பையேற்றுள்ளனர் மக்கள் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவர் தொழிலாளிகளும் விஞ்ஞானிகளுமே யாவர். இவர்களும் ஆடசிமுறையில் சேர்க்கப்படாதிருத்தலினாலேயே, நாம் இன்று உலகில் காணும் துயருற்ற நிலைமையேற்பட்டுள்ளது. ஆக்கத்தொழிலைப் பற்றி யாதும் அறியாதவர் ஆள்தல் எங்ஙனம்? இன்னும் ஆட்சி நடத்தும் வகுப்பினர், சரித்திரத்திலும் பொருளியல் நூலிலும் பயிற்சிபெற்று, ஆட்சிமுறையில் வல்லுனர் ஆகின்றனர் எனக் கூறப்படுகின்றது. அவர் பயிலும் சரித்திரம் பலகாலத்து அரசரின் வாழ்க்கை வரலாறுகளேயன்றி உண்மையான மக்கள் சரித்திரமன்று. அவர் கற்ற பொருளியல்நூல், உலகின்கண்ணுள்ள பொருள்களின் அளவை நிலையானதால் அதுவே பலமக்களிடையும் ஏதோ ஒருவாறு வழங்கப்படவேண்டும் என்றகருத்தை அடிப்படையாய்க்கொண்டது. இவ்வாறான காலத்திற்கியைந்திராத கருத்துக்கள் மறையவேண்டிய காலம் வந்துவிட்டது. உண்மையான சரித்திரம் பொதுமக்கள் வாழ்க்கையைப் பற்றி நிற்கவேண்டும். உண்மையான பொருளியல்நூல், உலகின் பொருளாதார நிலைமையை ஆக்கமுறைகளால் மேம்

படுமாறு செய்ய இயலும் என்ற கருத்துடனிருக்கவேண்டும். இவ்விரு உண்மைகளை நன்குணர்ந்தோர் ஆட்சி நடத்தும்போது சமூகம் உற்றமுறையில் அமைக்கப்பட்டு, நல்லாட்சியின்கீழ் நலங்கள்பல பெற்று பல்லோரும் இன்புற்று வாழ்வர் என்பது திண்ணம். தான்தோன்றிகளான அரசியல் தலைவரின் அறியாமைக்கும், அவ்வறியாமையினால் விளையும் தீமைக்கும், இன்றைய கோளாறான நிலைமையே தக்கசான்றாம். விஞ்ஞான ஆக்கமுறையின் உதவிபெற்று அரும்பெரும பொருள்கள்பெற்று எல்லோரும் நல்வாழ்க்கை நடத்தலாம். அவ்வாறின்றி, பெரும்பாலோர் சாண் வயிற்றுக் குணவும் ஒருமுழத் துண்டுமின்றி வருந்தும் தோற்றமே நம்முன்னுள்ள காட்சியாயுளது. சமூகக்குழப்பங்கள், உள்நாட்டுக் கலகங்கள்,, வேலையில்லாத்திண்டாட்டம், கொடும் போர்கள் இன்னோரன்ன கடும்பேய்கள் தலைவிரித்தாடுகின்றன. நடுக்கத்தையும், திகைப்பையும் விளைவிக்கும் கொடும் போரிடை உழலும் நிலைமையில் நாம் உள்ளோம். இந்நிலையினின்று மீள வேண்டுமாயின், நிறனற்றதும் தீங்கானதுமான போட்டிமனப்பான்மையைக் கொண்ட ஆட்சிமுறை அறவே அகற்றப்படவேண்டும். அதற்கான முயற்சியெடுப்பதே தம் முதற்கடமையென மக்கள் கருதி, அதில் உடனே முனைய வேண்டும். கொடுங்கோன்மையான ஆட்சிமுறையின்கீழ் யாவரும் நசுக்குண்டு அழியும்முன், அதை அழித்தல் இன்றியமையாததாம். விஞ்ஞான ஆக்கமுறையை அடிப்படையாய்க்கொண்டு, பொதுமக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்தும் ஆட்சிமுறை நிறுவப்பட வேண்டும். விஞ்ஞான ஆக்கமுறைகளில் ஒன்றான மருத்துவநூலில் தோன்றிய முன்னேற்றத்தால், உலகில் ஒருங்கே பலமக்களை கொள்ளைகொண்ட கொடும் நோய்கள் தலைக்காட்ட வொட்டாது ஒடுக்கப்பட்டன. இம்முறையில் நோய்வாய்ப்பட்டிறவாது தப்பின மக்களின் எண்ணிக்கை, போர்களில் மாண்டவரின் எண்ணிக்கையைவிடப் பன்மடங்கதிகமாம். கி. பி 1800-ம் ஆண்டில் உலகின் மக்கள் தொகை தொண்ணூறுகோடியாயிருந்தது கி. பி. 1920-ம் ஆண்டில் அத்தொகை நூற்றெண்பது கோடியாயிருந்தது. மக்கள்தொகை அதிகரிப்பதற்குக்காரணம் மருத்துவநூல் முன்னேற்றமேயாம். 1800-ம் ஆண்டினின்று 1920-ம் ஆண்டுவரை, பத்து கோடி மக்களே போர்களில் மாண்டனர். இதைப்பற்றி வருந்தும்போது, விஞ்ஞான ஆக்கத்தால் மக்கள்தொகை தொண்ணூறுகோடி அதிகரித்துள்ளது என்பதையும் நினைவிலிருத்தவேண்டும். எனவே விஞ்ஞான ஆக்கமுறைகளால் ஏற்படும் விளைவியல் மிகுதி, அதன் அழிக்கும் வன்மையால் ஏற்பட்ட இழவைவிட பன்மடங்கு அதிகமானது என்ற எண்ணம், நம்மை உளமடிவினின்று காப்பதாம். விஞ்ஞானீயப் போர்க் கருவிகளால் கொல்லப்பட்டவரைவிட அதிகமான எண்ணிக்கையான மக்களை அறிவின் வளர்ச்சியாலும் செயல்வன்மையாலும் விஞ்ஞானிகளும் தொழிலாளிகளும் அழிவுறாது காப்பாற்றுகின்றனர் என்பதை நினைவு கூர்தல் நன்று. அவ்வாறு செய்வதால், முன்னேற்றத்தில் நம்பிக்கை ஏற்படும். வருங்காலத்தில் மக்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் நன்கு வாழும் அகக்காட்சி நம்மை விட்டகலாதிருக்கும்.

எல்லாமக்களும் நேர்மையற்ற பங்கிடுமுறைகளால் ஏற்படும் குழப்பத்தினின்று தப்பும் வழிகளை உடனே நாட வேண்டும்; விஞ்ஞான விளைவியல் பொருள்களை உற்றமுறையில் பயன்படுத்துதற்குகந்தவாறு சமூகம் சீர்திருத்தியமைக்கப்படவேண்டியதற்கான முயற்சிகளில் முற்றும் ஈடுபடவேண்டும். அவ்வாறான சமூக அமைப்பை நிறுவதல் இயன்றதொன்றேயாம். நம் உடலின் நுட்பமான அமைப்பு முறையைப் பின்பற்றவேண்டும். பல உறுப்புக்களும் எல்லாவற்றிற்கும் அடிப்படையான எலும்புக்கூடும், தமக்கான பணிகளைச் செவ்வனே யாற்றுகின்றன. சமூக அமைப்பென்பது எலும்புக்

(தொடர்ச்சி 177-ம் பக்கம் பார்க்க)

# மூவர்.

(மோ. க. ஸ்ரீனிவாஸன், எம். ஏ., பி. எல்.)

சாமினாதனின் முன்ஜாக்ரதையும் முன்கோபமும் மாதல் கிராமத்தில் ஒரு பழமொழியாகவே விளங்கிவந்தது. தான் கிராமமுனிசிப் என்ற ஹோதாவில் கட்டளைகள் பல பிறப்பிப்பார் மீறிநடப்பவர்களை தயை தாக்ஷண்யமின்றி சட்டத்துக்குள்ளாக்குவார். ஆனால் நல்ல குணம். மற்றவர்களுக்கொன்று தனக்கொன்று என்ற நியாயம் அவரிடம் காணமுடியாது. ஏராளமாக பொருளுதவிசெய்து தன் சினேகிதர்களையும் பந்துக்களையும் சரியான சமயத்தில் காப்பாற்றுவார்.

"உங்களுக்கு என்னநல்லகுணமிருந்து என்ன! முன்கோபமல்லவா எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறது" என்று அவரது மனைவி ரங்கநாயகி அடிக்கடி சொல்லுவாள்.

"ஆம்! ரங்கம்! சிறிது ஏமாந்தவனென்றோ அஜாக்ரதையுள்ளவனென்றோ தெரிந்தால், நம்மை குழிதோண்டி புதைத்துவிடுவார்கள். எங்களது உத்தியோகம் அப்படி என்று" பதிலளிப்பார்.

மாதல் கிராமத்தில் ஏராளமாக நில பலன்கள் சாமினாதனுக்கு இருந்தன. பலநாட்கள் குழந்தையில்லாமலிருந்து சாமினாதனின் நாற்பதாம் வயதில் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு விஜயம் என்று பெயரிட்டு மிகவும் அன்புடன் ஆதரித்துவந்தார்கள்.

விஜயனுக்கு ஏழுவயது. அவனும் தகப்பனாரின் முன்கோபத்தை தெரிந்துகொண்டு தன் தாயார்மாதிரி வெகுஜாக்கிரதையாகவே நடந்துகொண்டான். சாமினாதன் "டேய்! விஜயம்!" என்று கூப்பிட்டாலொழிய பக்கத்தில் போக மாட்டான். "உங்கள் குழந்தைகூட உங்கள் பக்கத்தில் வரப்பயப்படுகிறது" என்பாள் சிறித்துக்கொண்டே ரங்கநாயகி.

ஒருதினம் காலை மாதல் தண்டோராக்காரன் தண்டோரா அடித்துக்கொண்டு தெருத் தெருவாகப் போய்க்கொண்டிருந்தான். கிராமத்துப் பெரியவர்கள் சிறியவர்கள் குழந்தைகள் அனைவரும் வாயிலில் வந்து நின்றுகொண்டார்கள்.

"உஷார்! உஷார்! நம்மூருக்கு ஒரு மயிலுக்கப்பால் லம்பாடிக்கூட்டம் வந்திருக்குது. அவர்களில் எவராவது ஊருக்குள்ளேவந்தால் ஜாக்ரதை வீட்டுக்குள்ளே விடாதேங்கோ" என்றுசொல்லிக்கொண்டே தண்டோரா போட்டான்.

இது முன்ஜாக்ரதையில் முதற்பரிசு பெற்ற சாமினாதனின் உத்திரவே! இந்த லம்பாடிக் கூட்டத்ினருக்கு வூரோ வாசலோ கிடையாது. அலைந்தவண்ணமிருப்பார்கள் ஊருக்கு வெளியே குடிசைகள் போட்டுக்கொண்டு தங்குவார்கள். நாகரீகமென்பதே தெரியாதவர்களாயினும் அவர்களிடம் ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஏராளமாகக் காணப்பட்டன. அவர்கள்உண்ணும் ஆகாரங்களும் உடுப்பின் ஆபாசமும் பார்ப்போர்களுக்கு வெறுப்பை யளிக்கும். எச்சிலைத் தின்பார்கள். எலி, பெருச்சாளி, அணில் இவைகளைக் கொன்று உண்பார்கள்.

மாதல் கிராமச்சாவடியில் சாமினாதன் இக்கூட்டத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். "அப்படி! இந்தக் கூட்டம் ஒரு கிராமத்தின் பக்கத்தில் வந்து தங்கினால் ஊருக்கெல்லாம் ஆபத்து போலீஸ் ஸ்டேஷனிலிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல வேலைதான். நல்ல வேலையாக நம் கிராமத்திற்கு ஒன்றும் இதுவரையில் வரக்காணோம்" என்றார்.

அவர்களில் ஒருவர்: "இந்தக்கூட்டத்தை என் இப்படி விட்டுவிடவேண்டும். "சர்க்கார் இவர்களை சரியானவழியில் திருப்பக்கூடாதா?" என்றார்.

"அதெப்படி முடியும்! நாம் ஜாக்ரதையாக இருக்கவேண்டியதுதான் என்றார்" சாமிநாதன்.

"அம்மா! ஏன் அப்பா லம்பாடிகளைக் கண்டு அப்படி பயப்படுகிறார். அவர்கள் எப்படி யிருப்பார்கள், அம்மா" என்று ஒருநாள் காலை விஜயம் தன் தாயாரைக் கேட்டான்.

"விஜயம்! அவர்களும் நம்மாதிரி மனிதர்கள்தான். ஆனால் நமக்கு வீடிருக்கிறது. திண்ணையிருக்கிறது மழைபெய்தால் வீட்டுக்குள் இருந்துவிடுகிறோம். வெய்யில் நாட்களில் திண்ணையில் உட்கார்ந்து குளிர்ந்த காத்தை அனுபவிக்கிறோம். லம்பாடிக் கூட்டங்களுக்கு வீடோ வாயிலோ கிடையாது. சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், மேகங்கள் தென்படும் ஆகாசம்தான் அவர்கள் கூரை. புல்தரையில் படுத்துக்கொள்வார்கள்" என்றாள் ரங்கம்.

தாயார் சொல்லுவதை உற்றுக்கேட்டுக்கொண்டிருந்த குழந்தைக்கு கண்களில் நீர் ததும்பியது.

"ஏன் அம்மா! வீடுகள் கட்டிக் கொள்ளக்கூடாதா அவர்கள்".

"விஜயம்! அவர்களுக்குப் பணம் இல்லை ஏழைகள். அவர்களுக்கு ஊரே கிடையாது நீ மாதல் விஜயமல்லவா! அவர்கள் அம்மாதிரி சொல்லிக்கொள்ள முடியாது."

அச்சமயம், சுமார் காலை 10-மணியிருக்கும். சாமிநாதன் காலையிலேயே எழுந்து நிலங்களைப்பார்க்கப்புறப்பட்டுப் போய்விட்டார். ரங்கம் உள்ளே சமையல் செய்துகொண்டிருந்தாள். வீட்டு வாசலில் "அம்மா பிச்சைபோடம்மா" என்ற சப்தத்துடன் குச்சி தரையில் தட்டும் சப்தம் கேட்டது.

"விஜயம்! பார்த்தாயா! அவன் லம்பாடிப்பையன்! குரங்குடன் வந்திருக்கிறான்" என்றாள் ரங்கம்.

குழந்தை வேகமாக வாயிலுக்கு ஓடி வந்தான் ஒரு பையன் குரங்கை விளையாடச்சொல்லி கொம்பைத் தட்டிக் கொண்டிருந்தான். அழுக்கு மூடிக் கொண்டிருந்த ஒரு கந்தலை இடுப்பிலும் அதேமாதிரி துணியை தலையிலும் கட்டிக் கொண்டிருந்தான் இரண்டு காதுகளிலும் சிறுமணியால் கோர்க்கப்பட்ட நகைகளணிந்து கொண்டிருந்தான்.; கழுத்திலும் பலமாலைகள்; மணிக்கட்டுகளிலும் அம்மாதிரியே. வயது பதினைந்துக்குமேலிராது.

குரங்கும் அப்பையன் முகத்தைப் பார்த்துக்கொண்டு அவன் சொல்லுவதை செய்துகொண்டிருந்தது ஆடும்போது பல்லைஇளி என்பான்; பல்லையிளிக்கும். பல்லையிளிக்கும்போது கூத்தாடு என்பான்; கூத்தாடும். தடியை கழுத்தில் வைத்துக்கொண்டு நடவென்பான்; தன் கழுத்தில் ஏறிஉட்கார்ந்து குதிக்கச்செய்வான் தான் பாடும் போது நடனம் செய்வதற்கு பழகி வைத்திருந்தான். தாறுமாறான பாட்டுகள்தான் ஆனால் இவைகளை சிறிது நேரம் நின்று பார்த்துக்கொண்டிருந்த ரங்கமும் அவைகளில் காணப்படும் அர்த்தத்தை அறிந்துகொண்டு ஆச்சரியப் பட்டாள்

"குரங்கே நீ என் தம்பி! நான் உன் அண்ணன்! நீ எனக்கு உதவி! நான் உனக்கு உதவி! நீ பாடாமல் ஆடுகிறாய்! நான் ஆடாமல் பாடுகிறேன்! காட்டிலே உனக்கும் வீடு, எனக்கும் வீடு! நீ மரம் தாவினால் நான் ஊருதாவுகிறேன்! வீடுகளில் உன்னை ஓட்டுவதுபோல் என்னையும் ஓட்டுகிறார்கள்! நீயும் ஏழை! நானும் ஏழை! ஆடுகுரங்கே! ஆடு குரங்கே."

அவன் பாடுவதில் மேல்கண்ட அர்த்தம் காணப்பட்டது. ராகம் எதுவும் கிடையாது. தடிதான் தாளம்.

சிறிதுநேரம் குரங்கையும் பையனையும் பார்த்துக்கொண்டிருந்து, தாயார்

சமையலரைக்குச் சென்றாள். விஜயத்தின் ஆனந்தத்திற்கு அளவு சொல்ல முடியாது குரங்கு ஆடும்போது தானும் ஆடுவதுபோல் நினைத்துக்கொண்டான். லம்பாடிப்பையனும் விஜயம் மனதை அறிந்து குரங்கைப் பலவித்தைகள் செய்யச்சொன்னான். பையன், குரங்கு விஜயம் மூவரும் ஒரே மனநிலையிலிருந்தார்கள். "அம்மா பிச்சைபோடம்மா" என்ற வார்த்தைகள் பையன் சொல்லவில்லை. குரங்கு ஒருபிடி அரிசிக்காகவே தான் ஆடுகிறதென்பதை மறந்து வித்தைகள் செய்துகொண்டிருந்தது. விஜயமும் பிச்சை போடவேண்டுமென்பதையே மறந்து பையனையும் குரங்கையும் நோக்கிக்கொண்டிருந்தான்.

எதற்கும் ஒருமுடிவு ஏற்படவேண்டியது இயற்கைதானே. "எவண்டா அது" என்ற முறட்டு சப்தத்துடனும் கையில் தடியுடனும் சாமிநாதன் வீடுதிரும்பினார். அவரைக்கண்டவுடன் விஜயம் உள்ளே ஓடினான். குரங்கு ஆட்டத்தை நிறுத்தியது. பையன் கெஞ்சின முகத்துடன் "பிச்சைபோடு சாமி!' என்றான்.

"திருட்டுப்பயலே" போ புறப்பட்டு! ஏமாந்தால் எதாகிலும் அடித்துக் கொண்டு போகலாமென்று பார்க்கிறாயா! சீ! கழுதை போ!" என்றார் சாமிநாதன்.

பையன் போகவில்லை. கத்திக்கொண்டேயிருந்தான். இதற்குள் ரங்கம் கையில் அரிசியுடன் வெளியே வந்தாள்.

"போவென்று சொல்லாமல் பிச்சை போடவும வந்துவிட்டாயே! உள்ளே போ"என்று அதட்டினார் தன்மனைவியை.

"ரொம்பநேரமாகக் கத்துகிறது. இந்தப்பிடி அரிசியை போட்டால் ஓடிவிடுகிறது." என்றாள் ரங்கம்.

"அரிசிக்காகவா நான் சொன்னேன்! இந்தக்கூட்டமே பொல்லாத கூட்டம் ஒருநாள் போட்டால் பிரதிதினமும் வரும். போ உள்ளே" என்று அதட்டுவதைப்பார்த்து பயந்தவண்ணம் ரங்கம் உள்ளே சென்றுவிட்டாள். விஜயம் எட்டி எட்டிப் பார்க்கிறானே தவிர வெளியில்வர தைரியமில்லை.

சாமிநாதன் போடும் கூச்சலைப்பார்த்து குரங்கு அவரை பல்லையிளித்து பயம்காட்டியது. எரியும் தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல் சாமிநாதனுக்குக் கோபம் அதிகரித்தது. பையனைத் தடியால் அடிக்கச்சென்றார். குரங்கு இவர்மேல் பாய வந்தது. ஓங்கினதடி குரங்கின் முதுகில் விழுந்தது. குரங்கு அப்படியே சுருண்டுவிழுந்தது. பையன் ஓடி அதை தோளில் தூக்கிக்கொண்டு அழுதுகொண்டே சாமிநாதனை திட்ட வாரம்பித்தான். பையனுக்கும் முதுகில் ஒரு அடி விழுந்தது. அந்த அடி அவனுக்கு திருப்தியை யளித்தமாதிரி யிருந்தது. குரங்குக்கு விழுந்தஅடி தனக்கும் விழுந்ததே யென்று சந்தோஷப்பட்டான். ஆனால் ஓடிக்கொண்டு திட்டினான். "உன்வீட்டிலே எழவுவிழ" என்ற சப்தம்தான் கேட்போர்கள் காதில் பட்டது. மற்றபதங்கள் அவன் விம்மலிலும் கண்ணீரிலும் மறைந்திருந்தன.

பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் "ஐயோ பாவம்! அந்தப்பையனை ஏன் அப்படி அடிக்கவேண்டும்! அதன் வாயிலிருந்து சாபம் கேட்கவேண்டும்! ரங்கம் ஒரு குழந்தையை வைத்துக்கொண்டிருக்கிறாள்." என்றார்கள். பையனும் அழுதவண்ணம் ஓடினான்.

சாமிநாதன் உள்ளே வந்ததும் விஜயம் தகப்பனார் பக்கத்தில்வந்து "ஏன் அப்பா அவனையும் குரங்கையும் அடிக்கவேண்டும். ரொம்பநேரமாக விளையாட்டு காட்டிவிட்டு பிச்சைபோடாமல் அனுப்பித்தால் எனக்கல்லவா பாபம்" என்றான்.

குழந்தையின் உள்நோக்கத்தை சாமிநாதன் அறியவில்லை. குரங்கின் நோவும் பையனின் வலியும் விஜயத்தின் மனத்துன்பமும் ஒரே அளவிலிருந்தனவென்றே சொல்லவேண்டும். அம்மூன்று உள்ளங்களையும் உள்ளங்களைப்படைத்த கடவுளுதானறிந்தார். ஆதலால் சாமிநாதன் தன்மனைவியை சீ! போ! இதற்கெல்லாம் என்ன பாபம் வந்துவிடப்போகிறது" திருடர்களையும் சோம்பேறிகளையுமா ஆதரிப்பது என்றுசொல்லி பேசாமலிருந்தார்.

மேலேசொன்ன சம்பவங்கள் நிகழ்ந்து சுமார் பத்துதினங்களுக்கெல்லாம் விஜயனுக்கு கடும்ஜுரம்கண்டது. 103, 104 என்று தர்மாமீடர் சொல்லி தாயையும் தந்தையையும் பயமுறுத்தியது. மிகவும் பிரபலமான வைத்தியர்கள் வந்துபோனார்கள். ஒவ்வொரு தினமும் மறுதினம் குறையுமென்று எதிர்பார்த்ததற்கு நேர்விரோதமாக ஜுரம் அதிகமாகிக்கொண்டேவந்தது ரங்கத்திற்கோ துக்கம் சொல்லமுடியவில்லை. பூர்ணகர்ப்பிணி. மருத்துவச்சி 'எச்சமயத்திலேனும் பிரசவமாகிவிடும், தயாராகவிருங்கள்' என்று சொல்லியிருந்தாள். விஜயத்தின் படுக்கையைவிட்டு அப்புறம் இப்புறம் அவள் செல்லவில்லை. இரவு நேரங்களில் கண்களை இமைகள் காப்பாற்றினால் இமைகளை ரங்கம் காப்பாற்றினாள். சாமிநாதன் சிலதினங்கள் விஜயம் பக்கத்திலேயே யிருந்தார். ஜுரம் அதிகமாக ஆக விஜயத்திற்கு ஞாபகம் பிசகிற்று. "அப்பா! குரங்கை அடிக்காதே! பையனை அடிக்காதே! என்னை அடி!" என்றுதான் பிதற்றம். "ஐயோ! குரங்கு! ஐயோ! குரங்கு" என்பான். "நான் குரங்கை அடிக்கவில்லை, கண்ணே!" என்பார் தகப்பனார். ரங்கத்திற்கு மனச்செவிக்கு பையனின் அழுகைக்குரலே கேட்டுக்கொண்டிருந்தது. "உன் வீட்டில் இழவுவிழ என்றல்லவா சபித்தது" என்று மனதிற்குள் நினைக்கும்போது உடம்பெல்லாம் சிலுசிலுப்பு ஏற்படும். விஜயத்தை உற்றுநோக்குவாள். மயக்கத்தால் குழந்தையின் கண்கள் சொருகிக்கொண்டேபோய்விடும்.

ஜுரம்கண்ட ஒன்பதாம்நாள் விஜயத்தின் உலகவாழ்க்கை முடிவடைந்தது. தாய் தந்தையர்களின் கண்ணீர் அருவிமாதிரி வெளிக்கிளம்பியது. கடவுள் என்ன காப்பாற்றி என்ன; மரணத்திலிருந்து அவர் காப்பாற்ற முடியுமா! மாதல் கிராமம் ஜனங்களனைவரும் குழந்தையின் கடைசி தூக்கத்தைக் கண்டுபோனார்கள் பக்கத்து வீட்டு பாட்டியம்மாவும் "ரங்கம்! உன் புருஷன் என் அந்த துஷ்டப்பயலை அடித்து அவன் வாயில் விழவேண்டும், அவன் சொல்லி இருபது தினங்கள் கூட ஆகவில்லையே" என்று உபசாரம் சொன்னாள். சாமிநாதன் மனது 'ஆம்' என்றுசொல்வதுபோலிருந்தது. துக்கத்தில் மூழ்கிக்கிடந்த ரங்கத்திற்கு யாதும் விளங்கவில்லை.

* * * *

ஒருகட்டிடத்தில் நெருப்புப்பிடித்துக் கொண்டெரியும்போது வெப்பமேற்படுகிறது தீ தனது பலத்தை காண்பித்து ஓய்ந்தபின்பு எல்லாம் கருகிப்போய் சிலநேரம்வரை தீயின்வெப்பமிருந்துகொண்டிருக்கிறது. விஜயம் இறந்து பத்து தினங்கள்வரை தம்பதிகள் வெளியிலே வரவில்லை. ரங்கம் ஒருஅறைக்குள்ளே ஜன்னல்களையெல்லாம் மூடிவிட்டு படுத்து அழுதவண்ணமிருந்தாள். சாமிநாதன் விஸ்தாரமான கூடத்தில் இங்குமங்கும் உலாவிக்கொண்டே விஜயத்தின் உருவத்தையே மனதில் பதியவைத்துக் கொண்டிருந்தார். பத்துதினங்கள் ஆனபின்புதான் தன் உத்தியோகத்தை கவனிக்க வெளிவந்தார்.

காலைவேளை. பலதினங்கள் உள்ளேயேஇருந்துவிட்டு வெளியில்வரும்போது எல்லாம் புதிதாக இருப்பதுபோலிருந்தது. தன் தெருவைவிட்டு மற்றொரு தெருவிற்குத் திரும்பினார். அச்சமயம் தடியடியுடன் பாட்டு சப்தம் காதில் விழுந்தது லம்பாடிப் பையனின் குரல் காதில் விழுந்தது. பழைய நினைவுகள் தோன்றி சாமிநாதன் மனதைத் துளைத்துவிட்டது. பையன் தடியால் அடித்துக் கொண்டு பாடினானே தவிர அவனுடன் குரங்கு காணப்படவில்லை. இவர் வருவதை பையன் எங்ஙனமோ பார்த்துவிட்டான். எடுத்தான் ஓட்டம். அப்பையனை சாமிநாதன் ஞாபகம் வைத்திருந்ததுபோல் அப்பையனும் சாமிநாதனை நன்றாக அடையாளம் வைத்திருந்தான் போலிருந்தது. சாமிநாதன் தனது அலுவல்களை கவனிக்கச் சென்றான்.

மறுதினம் பக்கத்து ஊருக்கு தாசில்தார் வந்திருப்பதாக சமாசாரம் வரவே சாமிநாதன் அங்கு செல்லவேண்டியிருந்தது. அக்கிராமம் மாதலிலிருந்து இரண்டு மைல்தான். கால்நடையாகவே சாயங்காலம் புறப்பட்டார். அவரது வழக்க

மான தடி கையிலேயே யிருந்தது. கூட இரண்டுமூன்று ஆட்கள் பின் தொடர்ந்து வந்தார்கள். லம்பாடிக் கூட்டங்கள் மூட்டைக்கட்டிக்கொண்டிருந்தன. சில பெண்கள் ஆடவர்களுக்கு பேன்பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிலர் சமைத்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் ஒரு பையன் பக்கத்திலுள்ள புளியமரத்தின் காயை கல்லால் அடித்துப் பொருக்கிக்கொண்டிருந்தான். அப்பையன் சாமிநாதனைக் கண்டதும் ஓட்டம்பிடித்தான். பக்கத்தில் வருபவர்களுக்கு அவன் பயத்தால் ஓடிகிறானென்று நினைத்சார்கள். சாமிநாதனுக்கு அவன் குரங்காட்டி பையனென்றும் தன்னை அடையாளம் கண்டுகொண்டு ஓடுகிறானென்றும் தெரியவந்தது. மனதிற்குள் அப் பையனை கூப்பிட்டு சமாதான்ப்படுத்தவேண்டுமென்று நினைத்தான். ஆனால் அதற்கு தைரியம்வரவில்லை. பிறர் ஏளனம் செய்வார்களென்று சிறிது தயங்கினான். மேலும் தாசில்தாரைப்பார்க்கப் போவதால் எங்கும் தங்கமுடியவில்லை.

தாசில்தார் கேட்கும் கேள்விகளுக்கு ஒன்றும் சரியானபதில் சொல்லமுடியவில்லை. மகனிறந்து பதினேருதினங்கள் தானாகிறதென்று தாசில்தார் அறிந்து "சாமிநாதன்! தாங்கள் இந்த மனோநிலையில் ஏன் இங்கு வரவேண்டும். சொல்லியனுப்பியிருந்தால் நான் கூப்பிட்டிருக்க மாட்டேனே. ஒருமாதம் லீவு தருகிறேன்" என்றார்.

அன்று இரவு ஒரு சிநேகிதர் வீட்டிலேயே படுத்திருந்து மறுதினம் அதிகாலை எழுந்திருந்து மாதனுக்குத் திரும்பினார். நல்ல நிலவு. அவருக்கு விஜயத்தின் முகம் மறக்கவே முடியவில்லை அத்துடன் லம்பாடிப்பையனும் குரங்கும் ஒன்றாக புணைக்கப்பட்டிருந்தது.

லம்பாடிக்கூட்டம் அப்பொழுது அங்கு காணோம். முதல்நாளிரவே அவர்கள் அந்தவிடத்தைவிட்டு வேறுஇடத்திற்குச் சென்றார்கள். அந்தவிடத்தில் சாமிநாதன் சிறிதுநேரம் நின்றார். சிறிது தூரத்தில் ஏதோ விழுந்துகிடப்பது நிலவில் தென்பட்டது. பக்கத்தில் சென்று நோக்கும்போது ஒரு இறந்த குரங்கு காணப்பட்டது கால்கள் கட்டப்பட்டிருந்தன. முதுகு எலும்பு ரத்தகாயமாகவிருந்தது.

ஆம்! தான் அன்றையதினம் அடித்த குரங்குதான் அது! விஜயம் மரணமடைந்தபோது ஏற்பட்டமனக்கலக்கம் அச்சமயத்திலும் ஏற்பட்டது. எங்கும் நிச்சப்தம்! மரங்களின் கிளைகள்கூட அசையவில்லை. "குரங்கை அடிக்காதே! பையனை அடிக்காதே! என்னை அடி!" என்று விஜயம் ஜன்னியில் சொன்னது உண்மை மொழிகள்தான். மரணத்திற்கு மனிதன் மிருகம் என்ற வித்தியாசம் ஏது! சிறிதுநேரத்திற்கு முன்புதான் குரங்கு இறந்திருக்கவேண்டும். விஜயம் இறந்த பிறகுதான் தானும் இறக்க வேண்டுமென்று உயிரை பிடித்துக் கொண்டிருந்ததோ!

இவைகளெல்லாம் சாமிநாதனுக்கு மனதில் தோன்றிய எண்ணங்கள். குரங்கைத்தொடுவதற்கு அஞ்சினான். சந்திரனது ஒளி மங்கிவிட்டது, கிழக்கு வெளுத்துக்கொண்டுவந்தது. குரங்குப் பையனைக்கண்டிருந்தால் அவனது மன்னிப்பை கேட்டிருப்பான். இனி பையனை எங்குகாண்பது. குரங்கு விஜயம் பையன் மூவரையும் கண்டுபிடிக்கவேமுடியாது என்பது நிச்சயமென்றே சொல்லிக் கொண்டு சாமிநாதன் வீடுதிரும்பினான்.

வாயிலில் வேலைக்காரி நின்றிருந்தாள். "என்ன சாமி! சமயத்தில் போய்விட்டீர்களே; நேற்று இரவு 1-மணிக்கு அம்மாவுக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது" என்றாள்.

---

(172-ம் பக்க தொடர்ச்சி)

கூட்டைப்போன்றது அதைச்செம்மையாய் அமைத்து, உறுப்புக்கள் எனும் பொதுமக்களை இயைந்து இயங்கச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தலே மக்கள் அறிவின்மேலான பணியாம். பலபகுதிகளும் தத்தம் பணியை நேர்மையுடனாற்றுவதனால், சமூக வாழ்க்கையின் பலனைப்பெறலாம். மக்கள் செழித்தோங்குவர்; சமூகம் தழைத்தோங்கும்.

# ஓர் புதிய பாஸ நாடகம்.

ய. மஹாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.

காளிதாஸனுக்கும் சில நூற்றாண்டுகள் முன்னிருந்த **பாஸ** கவியின் நாடகங்களில் பல சுமார் 30 வருடங்களுக்கு முன் திருவனந்தபுரத்தில் பிரசுரிக்கப்பட்டன. அந்நாடகங்கள் அதி புராதனமானவைகளாதலால் சில அம்சங்களில் பிற்காலத்திய நாடகங்களுக்கு வேறுபாடு உள்ளனவையாகக் காணப்படுகின்றன. இவ்வித அம்சங்களைப் பொருந்திய மற்றொரு நாடகம் **கத்தியவார்** ராஜாங்கத்தில் ஒரு புஸ்தகசாலையில் கண்டுபிடிக்கப்பட்டு சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந் நாடகம் ஸ்ரீமத் ராமாயணத்தின் பாலகாண்டக் கதையைத் தழுவியது. திருவனந்தபுர நாடகங்களில் அயோத்தியாகாண்ட யுத்தகாண்டங்களைத் தழுவிய இரு நாடகங்கள் ஏற்கனவே இருக்கின்றன. **யக்ஞபலம்** என்ற இந்நாடகம் கிடைத்ததினால் **பாஸன்** ராமாயணத்தை மூன்று பாகமாகப்பிரித்து நாடகமியற்றிய ஸாமர்த்தியத்தை நாம் காண்கிறோம். இவ்விதமே பாஸன் பாரதத்தைப் பலதுண்டுகளாக்கி சிறிய நாடகங்களாய் இயற்றியுள்ளார் என்பது ஸம்ஸ்கிருத ரஸிகர்கள் அறிந்த விஷயம். இந்த **யக்ஞபல** நாடகம் மிகவும் அழகாயிருக்கிறது. இதன் **ஆறாவது அங்கத்தை** மொழிபெயர்த்து நம் நேயர்கள் ரஸிக்கும் பொருட்டு இங்கு பிரசுரிக்கிறேன். நாடகத்தை வெளியிட்டவர்கள் இம் மொழிப்பெயர்ப்பை அனுமதித்திருக்கிறார்கள்.

## யக்ஞபலத்தின் ஆறாவது அங்கம்.

**களம்—1.** மூன்று சிப்பாய்கள் பிரவேசம்.

**முதலாவது சிப்பாய்:** அடே! முஷ்டிக! ஆச்ரமத்திலிருந்து இம் மிதிலைக்கு வந்திருக்கும் விச்வாமித்ர மஹரிஷிக்குத் தொண்டு புரிய நமக்கு ஆக்ஞை இவர் எவ்வளவு காலம் இருப்பாரோ தெரியவில்லை.

**இரண்டாவது சிப்பாய்:** அடே! ஸ்தூலாம்ஸ! அது நமக்கென்ன தெரியும். ஆனால் அவருடன் வந்திருக்கும் இரண்டு பையன்கள் என்ன அழகு அப்பா! மஹரிஷிக்குத் தொண்டு செய்வது அவர்கள் அழகையே நான் பார்த்துக்கொண்டிருக்க மிகவும் உதவுகிறது.

**மூன்றாவது சிப்பாய்:** முஷ்டிக! அந்த அவர்களைப் பையன்கள் என்று சொல்லுகிறாயே

**முஷ்டிகன்:** அடே தண்டபாஹோ! விச்வாமித்ரரும் மஹாராஜாவும் அவர்களை குமாரர்கள் என்றுதானே சொல்லுகிறார்கள். ஆதலால் நானும் அவ்விதமே கூறினேன்.

**ஸ்தூலாம்ஸன்:** அது எப்படியோ. ஆனால் மூத்தவனான ராமன் இனிச் சிறுவனல்ல. யுவ புருஷனுக்கேற்ற மாறுதல்கள் அவனுக்கு ஏற்பட்டுவிட்டன.

**தண்டபாஹு:** அது எப்படி?

**ஸ்தூலாம்ஸன்:** நம் மஹாராஜாவின் புதல்வி ஸீதாதேவியை இந்த உத்யானவனத்தில் அவன் மிகவும் கவனிக்கிறான்.

**முஷ்டிகன்:** எப்போதும் நிழல்போல் லக்ஷ்மணன் அவனை பின்தொடர்வது வழக்கம். இப்போது விச்வாமித்ரர் ராமனை இங்கு விட்டுவிட்டு லக்ஷ்மணனைத் தனியே உபதேசம் செய்யும் சாக்குச் சொல்லி அழைத்துச் சென்றுவிடுகிறார்.

# மாசு மருவு அன்னியில்



# சோபனா ஸமரத்

சொல்லுகிறார் சருமத்தை
எளிதில் பாதுகாற்கலாம் என்று




"என் சருமத்தைப் பாதுகாக்க நான் தினமும் செய்வது வேறு ஒன்றுமில்லை. சருமத்தை அழகாய் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லெட் சோப்பை உபயோகிக்கிறேன். நீங்களும் இந்த முறையைச் செய்து பாருங்கள். சருமத்தை அதிக மேன்மையாக செய்கிறது" என்று அழகிய சோபனா சொல்லுகிறார்.

# லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நடிகளின் சுந்திர சோப்

LTS. 57-172 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

**ஸ்தூலாம்ஸன்:** நம் ராஜகுமாரியும் மரங்களின் பின் மறைந்து நின்று அவனையே பார்த்துக்கொண்டிருக்கிறான்.

**முஷ்டிகன்:** மஹாராஜாவுக்குச் சம்மதமானால் இவர்களுக்கு விவாஹம் சீக்கிரம் நடக்கும்.

**தீர்க்கபாஹு:** கல்யாணம் மட்டும் ஆகாமலிருந்தால் இருவருக்கும் சீக்கிரம் பைத்தியம் பிடித்துவிடும்.

**முஷ்டிகன்:** இந்த விஷயம் மஹாராஜாவுக்கும் விச்வாமித்ரருக்கும் தெரியுமோ தெரியாதோ?

**தீர்க்கபாஹு:** நன்றாய் தெரியும் அதனால் தான் தனியே அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள ஸாத்தியமாகிறது.

**ஸ்தூலாம்ஸன்:** சீக்கிரம் அவர்களுக்குக் கல்யாணமாகிப் பார்த்தால்தான் எனக்கு ஜன்ம ஸாபல்யமாகும் போலிருக்கிறது.

**தீர்க்கபாஹு:** அதோபார், ராமன் வருகிறார். நம்வேலையை கவனிப்போம் வாருங்கள். (போகிறார்கள்)

**களம்—2** ஏக்கத்துடன் கூடிய ராமன் பிரவேசம்.

**ராமன்** (நடந்துகொண்டே பெருமூச்சு விட்டு) களங்கமற்ற மதிமுகமுடைய அந்த அழகி இங்கு புஷ்பங்களைக்கொய்த வண்ணம் என்று என்முன் தென்பட்டாளோ அன்று முதல் என்மனம் எல்லாவற்றையும் மறந்து அவளை மறுபடி காண்பதெவ்விதம் என்ற ஒரே ஏக்கம் பிடித்ததாக ஆகிவிட்டது. ஆஹா! இவள் யார்? ஸர்வலோகத்தையும் மோஹப்படுத்தும் பொருட்டு பிர்ம்மதேவன் இந்த ஸர்வாங்க ஸௌந்தரியைச் ச்ருஷ்டித்தானோ? அல்லது, மன்மதன்தான் பிர்ம்மாவுடன் போட்டிப் போட்டுக்கொண்டு இவ்வங்கனையைச் ச்ருஷ்டி செய்து அவர் கர்வத்தை நினைத்தானோ? என்ன ஆச்சரியம். ஒருதரம்தான் பார்த்தேன். இனி உலகத்தில் மற்றொன்றை பார்க்க மனதில்கூட எண்ணாத நிலமையைச் செய்துவிட்டாள். மறுபடியும் பார்க்க நேரிட்டால் என்ன செய்துவிடுவாளோ அறிகிலேன். பால் கொடுத்து வளர்த்த அன்பு அமுதமாய் பெருகும் என் தாய்மார்களை வீட்டில் விட்டுவிட்டு வெளிக்கிளம்பிய எனக்கு மனதில் வேதனையொன்றையும் காணும். பயங்கரமான ஆயுதங்களை பிரயோகிக்கும் அரக்கர்களின் முன் நான் தயங்கியதில்லை. இவளைப்பார்த்த பிறகு நான் என் மனதை நிலைப்படுத்த முடியவில்லை. நான் முன் இருந்த ராமன்தானோ? வேறு ராமனோ? அல்லது யக்ஞ விக்னம்செய்த அரக்கர்களை அஸ்திர சாஸ்திரங்களினால் த்வம்ஸம் செய்துவிட்டோம் என்று நான் கொண்ட மனஉறுதியை பங்கப்படுத்த இது பகவானின் சூழ்ச்சியோ? ஆஹா! அவளைத் திரும்பக் காணவேண்டுமென்று ஆவலைத் தூண்டி மன்மதன் எனக்கு ஜ்வரத்தைப்போன்ற தாபத்தைத் தருகிறான். செய்யத்தகாததையும் செய்விக்கிறான். ஏனெனில் இதுவரை மஹரிஷியின் உத்திரவின்றி எந்த காரியமும் செய்தரியாத நான் அவரிடம் சொல்லாமல் திருடனைப் போல் இங்குவந்து நிற்கின்றேனே! மேலும், காட்டிலும் போர்க்களத்திலும் என்றும் எனக்கு தோழனாய் பின்தொடரும் லக்ஷ்மணனை—என்னுடைய மற்றொரு . சரீரத்தை—விட்டுவிட்டல்லவா இங்கு வந்துவிட்டேன். என் ஆசாரியரையாவது லக்ஷ்மணனையாவது இதைப் பற்றி நான் கேழ்க்கவுமில்லை. இது நியாயமா? அல்லது தகாததா என்று கூட யோசிக்கவில்லை. மனமோ திடீரென்று அவளிடம் இழுத்துக் கட்டப்பட்டதுபோல் ஆகிவிட்

டது. சலிக்காத - சித்தமுடைய முன்னிருந்த ராமன்தான் நான் என்று எப்படி நினைக்கமுடியும்! இருக்கட்டும் விச்வாமித்ர மஹரிஷியை விட்டு விலகியிருப்பது உசிதமாகாது. அவரிடமேசொல்கிறேன். இன்னகுலம், இன்னவரலாறு என்று தெரியாத ஒரு பெண்ணைப் பார்க்கவேண்டுமென்ற இந்த மனோ வேகத்தை அடக்கிவிட வேண்டும். அவளைப் பார்க்கத்தகாத துக்கத்தை என்மனம் அடைந்தாலும், களங்கமற்ற நல்லோர் நடத்தையை நான் கடக்கமாட்டேன். (போகிறார்) ஆஹா! என் வெளியே செல்லமுடியவில்லை. என் கால்கள் இங்கு கட்டுண்டு போயினவா என்ன! இவ்விடம்விட்டு நகர்வது அஸாத்தியமாயிருக்கிறதே. அவளைப்பார்க்காத இக்கண்கள் வேறு எதையும் பார்க்க சக்தியற்றவைகளாகிவிட்டனவே! எவள் முகத்தைப் பார்த்தமாத்திரத்தில் ஹிருதயம் ஆனந்தம் பொங்குகிறதோ அவளைப் பார்த்துவிட்டேதான் போகவேண்டும். (யோசித்து) அவள் இன்று இவ்விடம் வராவிட்டால்? கொஞ்சநேரம் இருந்து பார்த்துச்செல்வேன். ஆமாம்; புத்திவானாய் இருப்பவன் ஸந்தேகிக்கத் தகுந்த காரியத்தில் ச்ரமத்தை ஏற்றுக்கொள்வானா? இங்கு நிற்பது தகவே தகாது. மஹரிஷி பிரம்மசரியத்தின் நியமங்களை உபதேசிக்கும்போது மனதை அடக்குவதல்லவா முக்கியமானதென்று வற்புறுத்தியிருக்கிறார். ஆகையால், பிரம்மசரியத்தை உபதேசிக்கப் பெற்ற ராமன் ஸ்திரீயைப் பார்ப்பதா? சீ, இங்கு தனிப்பட ஒரு க்ஷணம் கூட நிற்பது தவறு. (போகப்பிரயத்தனப்பட்டு) இதோ போகிறேன். (முன்னோக்கி) ஆஹா! இதோ மரத்தடியில் உட்கார்ந்திருக்கிறாள். என் கண்களை குளிரச் செய்பவள். சற்றுபார்த்து ஆனந்தித்தப்பின் செல்வேன். (நிதானித்து) காற்றில் அசையும் பூங்கொடியல்லவா இது. செய்! ஏமாந்து போனேன். என் தடதடத்த மனதல்லவா இப்படி என்னை மோசம் செய்கிறது. காமிகள் இவ்விதமே மதிமயங்குகிறார்கள். ஹ்ருதயத்தின் திடத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு சரீரத்தில் தாபத்தை உண்டாக்கி புத்திமான்களுடைய உள்ளத்தைக்கூடக் கவர்ந்து தங்கள் அழகில் மயங்கச் செய்கிறார்கள் பெண்கள். (யோசித்து) அப்படியும் சொல்லமுடியாது. நான் இங்கு இருப்பதை நோக்கி அவள் ச்ருங்கார நடை நடந்தாளா? இல்லை. என்னைப்பார்த்ததும் சலேரென்று கண்களைக் கவிழ்த்துக் கொண்டாள். என்முன்னால் பிறகு வரவுமில்லை என்னை அவள் மோஹிக்க செய்வதாக நான் சொல்லிக் கொள்வது பொய்யான வார்த்தை. ஆனால் உண்மையில் அவள் புருவங்களாகிற வில்களினின்றும் கடாக்ஷங்களாகிற அம்புகளை என் ஹ்ருதயத்தைக் குறிவைத்து எய்தினாள். நானோ அவள் என்மேல் காதல் கொண்டாள் என்றெல்லாம் வீண் எண்ணங்கள் எண்ணி மோசம்போகிறேன். சரி, நடக்கிறது நடக்கட்டும். நான் வீண் ஆலோசனைகள் செய்வதில் பிரயோஜனமில்லை. இனிச்செல்வேன்.

**(திரைக்குள்.)**

இவ்வழியே வாருங்கள் தோழிகளே! ராமன் (கேட்டு, நோக்கி) இப்போது கூடவா ஸந்தேகம்? சரத்கால சந்திரன் போன்று கண்கள் குளிரச்செய்யும் ஸுந்தர வதனமுடைய அப்பெண்மணி ஜீவன் இருக்கமாட்டாமல் தத்தளிக்கும் என்னைத்தன் ஜோதியால் உயிர்ப்பிப்பவள்போல் இரண்டு ஸகிகளுடன் இவ்விடமே வருகிறாள். மேகம் வானத்தில் மிதந்துவருவது கண்ட மயில் குதித்தாடுவதுபோல் இவள் இங்கு வருவதுகண்டு என் மனம் மகிழ்ந்து கூத்தாடுகிறது.

(தொடரும்.)

# உன்னைப் பிரியேன்.

(பேரன்.)

"நீ என்னைப் பிரியமாட்டாயே" என்றாள் காதலி.

"என்ன கேள்வி இது? நான் உன்னைப் பிரிவேனா? என் தாயாருக்கு உன் தாயாரைத்தெரியாது; என் தகப்பனாருக்கு உன் தகப்பனாரைத்தெரியாது; எனக்கும் நேற்றுவரையில் உன்னைத்தெரியாது; வாஸ்தவந்தான். ஆனாலும், இன்று நம் இருவருடைய மனமும் ஒன்றோடொன்று கலந்துவிட்டது. இதோ, இந்த நன்செய் வயலிலும் இதன் பக்கத்து வயலும் பாசனநீர் நிரம்பியதால் ஒன்றாகி இடையிலேயிருந்த வரம்புகளை முழுக்கிவிட்டது, பார். இதுபோல, நம் இருவருடைய மனமும் அன்பின் மிகுதியால் ஒன்றாகிவிட்டது; நாம் இரண்டு உடல்களையுடைய ஒருயிர் ஆகிவிட்டோம். இனிமேல் பிரிவு என்பதே சாத்தியமில்லை" என்றான் காதலன்.


அவன் பேசிய இன்சொல்லே அவனுக்குத் துன்பத்தைவிளைத்தது.

"மனம் இரண்டும் ஒன்றாகிவிட்டன; அவற்றை வேறாக பிரிக்க இயலாது" என்னும் மொழியிலேயே, காதலன் தன்னைப்பிரிந்து செல்வான் என்னும் செய்தியும் குறிப்பாக உணர்த்தப்பட்டது அல்லவா?

டெலிகிராம்ஸ்: "ஆர்யோபிளான்ட்ஸ்" டெலிபோன்: ஸௌத் 430 & 431

# பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:— ஸதரன் அவின்யூ, கல்கத்தா.



சௌரங்கி ஸ்கோயரில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் எங்கள் சொந்த கட்டிடங்கள். ஷை கட்டிடத்தின் அஸ்திவாரக் கல்லை 1941௵ ஜூலை௴ 31௳ அன்று ஆச்சார்யா ஸர் பி. ஸி. ராய் அவர்கள் நாட்டினார்.

கிளை ஸ்தாபனங்கள்:
ஜம்ஷெட்பூர்,
பெனரிஸ், பகல்பூர்,
மாங்கிர், பாட்னா,
கோமில்லா,
கர்ஸியாங், திப்ருகார்,
பாங்கூரா & மதராஸ்.

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 25 லக்ஷம்

சேகரித்த மூலதனம் ரூ. 8,90,000

வசூலிக்கப்பெற்ற மூலதனம் ரூ. 2,95,000

கம்பெனி வேலை செய்யத் தொடங்கிய முதல் வருஷத்திலேயே 10% வீதம் டிவிடெண்ட் (வருமான வரி இன்றி) வழங்கப் பெற்றது. 1941௵ செப்டம்பர்௴ முடிய இரண்டாவது வருஷத்தின் முற்பாதிக்கு ஓர் இடைக்கால டிவிடெண்டு வழங்க உத்தேசித்திருக்கிறது.

பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஒரு வருஷத்திற்கு 5% வட்டி வீதம் நாங்கள் பெற்றுக் கொள்ளுகிறோம்

**நாங்கள் எல்லாவிதமான பங்கு விற்பனைகளிலும், கவர்ன்மெண்ட் ஸெக்யூரிட்டிகளிலும் லேவாதேவி செய்கிறோம்.**

எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கெட் ரிப்போர்ட்"டுக்கு எழுதவும். வருஷ சந்தா ரூ. 3 மாதிரி பிரதிக்கு எழுதுங்கள்.

**இந்த ஸிண்டிகேட்டின் பாக்கி ஷேர்களை விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.**

எங்கள் சென்னை கிளை ஆபீஸ் ஆகஸ்ட் 1உ முதல், மாஜி ரயில்வே ரேட்ஸ் அட்வைஸரி கமிட்டி ஸுப்பிரண்டெண்ட்டாயிருந்த ராவ் சாஹேப் நடேச அய்யர் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் 12, தம்புசெட்டித் தெருவில் நடத்தப்படுகிறது.

# இந்தியப் பொருளாதாரமும் காந்தியின் வழியும்.

ஜே. ஜே. அன்ஜேரியா.

இந்தியப் பொருளாதாரத்தை விருத்தி செய்ய காந்தி கூறும் வழிகளாவது:

1. சுதேசியத்தை ஆதரிப்பது.
2. பெரிய பெரிய மெஷின்களின் உபயோகத்தைக் குறைவு படுத்தல்.
3. கைத்தொழில்களை நாடெங்கும் பரப்புவது.
4. சமவிநியோகம் செய்வது.

1. சுதேசியத்தை ஆதரிப்பதாவது, நாட்டில் செய்யப்படும் பொருள்களையே உபயோகப்படுத்துவதாகும். கூடிய மட்டும் அந்நியநாட்டு அனுவசியமான பொருள்களைப் பகிஷ்காரம் செய்வது இந்தியப் பொருளாதாரத்திற்கு நன்மை தரும். ஒரு மரம் அடியிலிருக்கும் பூமியிலிருந்து தனக்கு வேண்டிய சத்துக்களைக் கிரஹித்துக் கொள்வது போல, இந்தியர்கள் தங்கள் நாட்டிலுள்ள பொருள்களைத்தான் உபயோகப் படுத்தவேண்டும். ஒரு கிராமத்திலிருப்பவன் க்ஷவரம் செய்துகொள்ள கிராம நாவிதனைக் கூப்பிடவேண்டுமே தவிர, நகர நாவிதனைக் கூப்பிடக்கூடாது. நகர நாவிதன்தான் வேண்டுமென்றால், கிராம நாவிதனை நகரத்துக்கு அனுப்பி அந்தத் தொழிலைக் கற்றுக்கொண்டுவரச் சொல்லவேண்டும்.

இரண்டாவதாக, கூடுமான வரை இயந்திர உதவியைக் குறைத்து, பெருவாரியாக உற்பத்தி செய்வதை நிறுத்திச் சிறுகச்சிறுக உற்பத்தி செய்தலாகும். முன்பெல்லாம் காந்திஜீ இயந்திரங்களையெல்லாம் பகிஷ்கரிக்க வேண்டுமென்று எழுதிக்கொண்டிருந்தார். ஆனல் பிற்பாடு அவரே மனித சகாயத்தினல் செய்யமுடியாத, கடிகாரம், டைப்ரைட்டர் மெஷின்கள், வைத்திய கருவிகள் முதலியவைகளை இயந்திர சகாயத்தினல் செய்யலாம் என்று கூறியிருக்கிறார். 'ராட்டினம் ஓர் அழகான இயந்திரமே' என்று அவர் 'ஹரிஜனில்' எழுதியிருக்கின்றார். ஆனல் காந்திஜீயின் நோக்கம் மட்டும் என்னவென்றால், அந்த இயந்திர சகாயத்தினல் செய்யும் தொழில்களால் வரும் லாபம் முதலாளிகளுக்கு மட்டும் செல்லக்கூடாது. எல்லாத் தொழிலாளிகளுக்கும் லாபத்தில் பங்கு கொடுக்க வேண்டும்.

மூன்றாவதாக, தொழிலை ஒரே இடத்தில் நிலைப்படுத்தாமல் பல இடங்களில் விநியோகப்படுத்துவதே யாகும். எந்தத் தொழிலை ஆரம்பித்தாலும், அந்தத் தொழிலை ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கிராமவாசியும் செய்யவேண்டும். யுத்தம் வந்து நகரத்திலுள்ள ஓர் பெரிய மில்லில் குண்டு போட்டால், பிறகு அம்மில் வேலைசெய்தால்தான் துணி; அதுவரை அம்மணமாய் இருங்கள் என்று எவரும் கூறமுடியாது. ஒவ்வொருவர் வீட்டிலும் ராட்டினம் சுற்றினல் ராட்டினத்தின் மீது குண்டுபோட முடியாது. ஆனல் இதன் வழியே தொழிலாளிகளைக்கொண்டு முதலாளிகள் அதிக லாபமடைய வழியில்லை.

நான்காவதாக, சமவிநியோகம் செய்வதாகும். ஒரு தொழிலை ஒரே இடத்தில் குமிக்காமல் பல இடங்களில் பரப்பி வைப்பதில், ஒவ்வொருவருக்கும் சராசரி பங்கு கிடைத்திருக்கிறதா என்பதை கவனிக்கவேண்டும்.

காந்திஜீயினுடைய நான்கு வழிகளுக்கும் மேலே கூறிய பொருள் அவ்வளவு விளக்கமாக இல்லாவிட்டாலும்; போகப்போக இன்னும் புரியும்படி யாராவது பொருள் கூறலாம். அது தவிர, காந்திஜீ காட்டும் வழியே தொழில்களை ஆரம்பிக்க பலர் முயற்சியும் செய்யலாம்.

# லெக்ஷ்மியின் முன்னேற்றம்!

## புதிய பிஸினஸ்.

**1941-ல் : : : 101 லக்ஷம்.**

இந்தியாவிலும், பர்மாவிலும் உள்ள இக் கம்பெனியின் பாலிஸிதாரர்களான பொதுஜனங்களும் உத்தியோகஸ்தர்களும் சண்டையினுல் ஏற்படும் எல்லா விபத்துகளிலிருந்தும் தங்கள் தங்கள் பாலிஸிகளால் பூர்ண பாதுகாப்பு அளிக்கப்படுவார்கள். அப்படி எதிரியினுல் ஏற்படும் விபத்துகளில் ஷை பாலிஸிதாரர்கள் இறப்பார்களேயானுல், இன்ஷ்யூர் செய்யப்பட்ட பூருத் தொகையும் அவரவர்களுடைய சரியான வார்சுகளுக்குக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

**லெக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,**

**லாஹூர்.**

மதருஸ் பிராஞ்சு:—

யுத்த நெருக்கடியை முன்னிட்டு எங்கள் சென்னை கிளைஆபீஸ்
தற்காலிகமாக கீழ்கண்ட விலாசத்திற்கு
மாற்றப்பட்டிருக்கிறது.

**"டென்னிஸ் வில்லா"**
புன்துரை ரோடு,
வார்டு நெ. 12. ஈரோடு.

REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர். நெ. 1506

அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர்:—

M. K. கிருஷ்ணசெட்டி

கோயமுத்தூர்.

மதராஸ் விற்பனையாளர்:—

V. கனகய்ய செட்டி & Co.,

நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்,

மதராஸ்.




# கனவா - நினைவா.

ஸி. ஆண்டி. (8-வயது மூன்று மாதம்)

இரவு சுமார் பத்துமணி இருக்கும். நான் தூங்கப்போனேன். சிறிதுநேரம் கழிந்தது. எனக்கு ஓர் யோசனை தோன்றிற்று. இந்து மதம் இவ்வளவு க்ஷீணமடைந்ததைப்பற்றி என் நினைவில் வந்தது. துக்கம் பொங்கிக்கொண்டுவந்தது. உடனே வெளியில் நம்தேசக் கொடியைத் தூக்கிக்கொண்டு ஓடினேன். என்னுடைய நண்பர்களைக் கூப்பிட்டேன். எல்லோருக்கும் ஒவ்வொரு கொடியையும் கதர்உடையையும் கொடுத்தேன். எல்லோரும் பாடிக்கொண்டுப் போனோம். ஊர் ஜனங்கள் வந்து கூடிக்கொண்டனர். எல்லோரும் பாடிக்கொண்டு வந்தனர். பிறகு விடுவந்துசேர்ந்தோம். என் தகப்பனார் என்னை உதைத்தார். மகமது குலம் வாழ்க, இந்து குலம் வீழ்க என்றார். என் கண்களில் நீர் ததும்பின. உடனே கதர்துணிகளை வாங்கிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினேன். பிறகு ஊர் ஊராகச்சென்று பஜனைசெய்தேன். குல்பேதம் கூடாதென்றும், இந்து மதமும் வாழவேண்டுமென்றும், இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென்றும் ப்ரசாரம் செய்தேன். சில மாதங்களில் இந்து மதம் முன்னடைந்து வருவதையும் இந்தியா சுதந்திரம் அடைந்ததையும் பார்த்து ஆனந்தக்கடலில் மூழ்கினேன். மணி ஐந்து அடிப்

பதைக் கேட்டேன். பக்ஷிகள் கூவி என்னை தூக்கத்திலிருந்து எழுப்பிற்று. நான்கண்ட கனவை சிறிதுநேரம் யோஜித்தேன். இதுபோல் நிஜமாகவே நம் இந்து மதம் விருத்தியடைந்து இந்தியாவுக்கு சுதந்திரம் வரவேண்டுமென்று கடவுளை ப்ரார்த்தித்தேன்.

---

# தீர்ப்பு எப்படி?

A. M. சுந்தரம்.

ஒருநாள் இரவில் சில திருடர்கள் ஒரு கிழவியின் வீட்டிற்கு திருடச் சென்றூர்கள். ஆனல் அவர்கள் அவளுடைய வீட்டிற்குள்ளே நுழைய முடியவில்லை. அவர்கள் எல்லா உபாயங்களையும் செய்து களைத்துபோனூர்கள். கடைசியாக அவர்களுள் ஒருவன் கிழவியினுடைய எருமையை அவிழ்த்துவிட்டான். எருமை நடப்பதின் சத்தத்தைக்கேட்டு கிழவி விழித்துக்கொண்டாள். அவள் எருமையை கட்டுவதற்கு வெளியே வந்தாள். உடனே திருடர்கள் அவளை பிடித்து ஒரு மரத்திலே கட்டி வைத்தார்கள். பிறகு அவர்கள் தங்களுடைய ஆயுதங்களை மரத்தினடியிலேயே வைத்து விட்டு வீட்டிற்குள் நுழைந்தார்கள். வீட்டிலுள்ள ஸாமான்களைத் திருடிக்கொண்டு மனமகிழ்ச்சியுடன் வீடுதிரும்பினூர்கள். போகும்பொழுது மறதியாக தங்களுடைய ஆயுதங்களை மரத்தினடியிலேயே வைத்து விட்டுச் சென்றூர்கள்.

விடிந்ததும், திருடியசெய்தி போலீஸாருக்குக்கிடைத்தது. அவர்கள் திருடர்களை எவ்வளவோ தேடினூர்கள். ஆனல், கொஞ்சமேனும் குறிப்புக்கூடத்தெரியவில்லை. அப்பொழுது போலீஸார் அதே ஆயுதங்களின் உதவியால் அந்த திருடர்களை ஸந்தேகத்தின் மேல்பிடித்துவந்து நியாயாதிபதியின்முன் நிறுத்தினூர்கள். போலீஸார்களிடம் ஒருசாட்சியும் இல்லை. நீதிபதி அனேக உபாயங்கள் செய்தார். ஆனல், யாதொரு பயனும் உண்டாகவில்லை. அவர்களுள் ஒருதிருடனும் தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

கடைசியில் நீதிபதிக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. அவர் தீர்ப்பைச்சொல்லி அத்திருடர்களை விடுதலைசெய்தார். மேலும் "நீங்கள் குற்றமற்றவர்கள்; நான் உங்களை விட்டுவிடுகிறேன்" என்று சொன்னூர். பின்பு அத்திருடர்கள் சந்தோஷத்துடன் வெளியே

சென்றூர்கள். நீதிபதி அவர்களை திருப்பி அழைத்து என்ன தீர்ப்பு ஏற்படவேண்டுமோ அது ஏற்பட்டது" இப்பொழுது ஏன் நீங்கள் உங்களுடைய ஆயுதங்களை எடுத்துப்போகவில்லை? என்றூர். இந்த வார்த்தையைக் கேட்ட திருடர்கள் திரும்பி வந்து ஆயுதங்களை எடுக்கத் தொடங்கினூர்கள். உடனே நீதிபதி "எப்பொழுது இந்த ஆயுதங்கள் உங்களுடையதோ அப்பொழுது வேறுயார் திருடர்களாக இருக்க முடியும்? என்றுசொல்லி அவர்களை கைதிசெய்து கடினமாக தண்டனைகொடுத்து ஜயிலுக்கு அனுப்பினூர்.

## அறிக்கை.

பாரத மணிக்கு விஷய தானம் செய்பவர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள்:—

(1) கதைகளோ, கட்டுரைகளோ, பாரதமணி பக்கங்களில் மூன்றுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) கதைகள், கட்டுரைகள் எழுதுவோரின் முழுவிலாசமும், அவர்கள் தொழிலும் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(4) வேண்டிய தபால் பில்லை அனுப்பினுலொழிய, பிரசுரத்துக்கு அங்கீகரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

ஆசிரியர்

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

சென்னையிலிருந்து வெளியூர் போயிருக்கும் சந்தாதாரர்களின் விலாசத்தை உடனே நமது காரியாலயத்திற்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

மானேஜர்

# உதிர்ந்த மணிகள்.

**சீனாவில் தனுஷ்தக்ளி:**

மஹாத்மாகாந்தி சீன தம்பதிகளுடன் (சியாங்கே-ஷேக்கும், ஸ்ரீமதி சியாங்கும்) பேசிக்கொண்டிருக்கையில் தான் கொண்டுவந்த தனுஷ்தக்ளியில் அவர்களுக்கு நூற்றுக் காண்பித்தார். பின்பு எல்லோரும் விடைபெற்றுச் செல்லுகையில் ஸ்ரீமதி சியாங் "என்னுடைய ராட்டினம் எங்கே? என்னுடைய ராட்டினம் எங்கே?" என்று கேட்டாள். அதற்கு மஹாத்மா தவறுதலாக அது ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டிருக்கும். நான் அதை அனுப்புகிறேன் என்று கூறினர்.

அந்த தனுஷ்தக்ளி இப்பொழுது சீனவை அடைந்திருக்கிறது. ஸ்ரீமதி சியாங் அதில் நூல் நூற்றுலும் நூற்கலாம்; நூற்காமலும் இருக்கலாம். ஆனால் சீனர்கள் அதே மாதிரி ராட்டினம் செய்து நூல் நூற்பார்கள். அல்லது அந்த ராட்டினத்தை அபிவிருத்தி செய்யலாம்

—["ஹரிஜனில்" மஹாதேவ தேசாய்]

* * * * *

**ராவணர்கள் யுத்தம்:** உலகத்திற்கு இது ஓர் சோதனை காலம். யுத்தத்தினின்று எவராலும் தப்பமுடியாது. ராமாயணமும் மஹாபாரதமும் எழுதி வைத்துச் சென்றவர்கள் வெறும் கவிகளாக மட்டுமல்லாமல் தீர்க்க தரிசிகளாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஏட்டில் என்ன எழுதிவிட்டுச் சென்றனரோ அது இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது **ராவணர்கள்** சண்டை செய்கின்றனர். ஆகாயத்திலிருந்து சண்டை செய்கின்றனர். கடலுக்குள் புகுந்து சண்டை செய்கின்றனர். ஆனால் யுத்த பூமியில் நேருக்கு நேர் நின்று சண்டை செய்வதுதான் அவர்களால் முடியாது போல் இருக்கிறது!

### ஸ்திரீகளுக்கு யோசனைகள்.

பெற்றோர்களும் கணவர்களும் இந்த யுத்த காலத்தில் ஸ்திரீகளைக் காப்பாற்ற வேண்டியது முதற்கடமை. அவர்களிடம் தைர்ய ஊற்றை உண்டு பண்ண வேண்டும். ஸ்திரீகள் எதற்கும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாயும் கடவுளிடம் பக்தி பூண்டவர்களாயும் இருக்க வேண்டும். கடவுள் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், அக்காருண்ய மூர்த்திதான் எல்லோரையும் காப்பாற்றுகிறவன்.

ஒரு ஸ்திரீ எதிர்க்கப் பட்டால் அவள் ஹிம்சையைப் பற்றியும், அஹிம்சையைப்பற்றியும் தர்க்கம் செய்ய வேண்டியதில்லை அவளுடைய முதல் காரியம் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்வது. அவள் தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு எது வேண்டுமானுலும் செய்யலாம். கடவுள் அவளுக்குப் பற்களும் நகங்களும் கொடுத்திருக்கிறார். அதை அவள் தன் பலம் கொண்ட மட்டும் உபயோகப்படுத்த வேண்டும் அந்த சமயம் அவள் உயிர் போவதாயிருந்தாலும் அதற்கும் அவள் தயாராக இருக்கவேண்டும்.

—["ஹரிஜனில்" காந்திஜீ]

# புஸ்தக விமர்சனம்.

**ஜப்பான்:** (ஆசிரியர்: எ.கே. செட்டியார். விலை ரூ. 1. சக்திகாரியாலயம் 46, முத்துமாரிச் செட்டித்தெரு, சென்னை.) ஜப்பானின் வரலாற்றுச் சுருக்கத்தை அறிவதற்கு இந்நூல் மிகவும் உபயோகப்படும். ஜப்பானியரின் குணநிசயங்களும், கல்வியறிவும், தேச சேவையும், அரசியலமைப்பும், தெய்வ நம்பிக்கையும், பத்திரிகை முயற்சியும், எத்தன்மையானதென்று அறிவதற்கு இந்நூல் சிறந்த சாதனமாகும். உலகம் சுற்றிய தமிழரான ஸ்ரீமான் எ. கே. செட்டியாரவர்கள் ஜப்பானிற்குச் சென்று அந்நாட்டாருடன் பழகிப் பேசி அநுபவமுறையிலறிந்தவற்றைத் தொகுத்துத் தெளிவான தமிழ் நடையில் ஒரு புஸ்தகமாக எழுதியமைத்து, அதனை வெளியிட்ட சக்தி காரியாலயத்தாருக்கும் தமிழ் மக்கள் நன்றிப் பாராட்டக் கடமைப்பட்டவராவர்.

**இராமகிருஷ்ணர் அருள்வாக்கு:** (சக்தி காரியாலயத்தார் வெளியிட்டது. 46, முத்துமாரிச் செட்டித்தெரு, சென்னை.) உலகம் போற்றும் உத்தம சந்நியாசியான இராமகிருஷ்ணர் அருளிய திருவாக்கியங்களை சிறு நூலாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். உருவத்திற் சிறியதான இந்நூல் விலை மதிப்பிட முடியாத பெருமையையுடையது. இப்புஸ்தகம் சக்திகாரியாலயத்தில் கிடைக்கும்.

**பாரதநாட்டின் முப்பெருந் தலைவர்:** (ஆசிரியர்: அரவிந்தர். மொழிபெயர்ப்பாசிரியர்: பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல். விலை அணா-10. நவயுகப்பிரசுராலயம்; ஜார்ஜ்டவுன், சென்னை.) இந்நூலில் பங்கிம் சந்திரர், பாலகங்காதர திலகர், தயானந்தர் என்ற மூன்று உத்தம புருஷர்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'வந்தேமாதரம்' என்னும் இந்திய சுதந்திர மந்திரத்தை அருளிய தேசியக் கவி பங்கிம் சந்திரரை அறியாத இந்தியர் எவரும் இல்லை. இந்தியரிடையே சுதந்திர உணர்ச்சிக்கான இரத்தத்தை ஓட வைத்த தேசாபிமானியும், மலையினின்றும் மோதி முழங்கிக் கரை புரண்டு வரும் அருவிபோலத் தேசமெங்கும் சுதந்திர முழக்கம் உண்டாகும்படிக் கதையும் கற்பனையும் எழுதிய கலைஞருமான பங்கிம் சந்திரரின் வாழ்க்கை அம்சங்கள் நன்முக எழுதப்பட்டுள்ளன. கடல் மடை திறந்தாற்போல் சொற்பொழிவாற்றும் பெருமை வாய்ந்தவரும் பெருந்தியாகியும், ஆராய்ச்சியாளரும் ஒப்பற்ற ஜனநாயகத் தலைவருமான பாலகங்காதர திலகரின் வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது. இந்தியத் தலைவர் பலர்களில் தனிப்பட்ட பெருமைக்குரிய தயானந்தரைப்பற்றி அழகுபட எழுதப்பட்டுள்ளது. நமது இந்திய வேதங்களைப் பற்றி தயானந்தர் கொண்ட அபிப்பிராயங்களையும், ஆராய்ச்சிகளையும், வேதத்தைப் பற்றித் தாறுமாறாகக் கூறிய ஐரோப்பிய ஆராய்ச்சியாளரின் விபரீத போக்கைப் பற்றியும், வேதத்தின் உண்மையான தத்துவத்தைப் பற்றியும் ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டுள்ளது இப்புத்தகத்தின் ஆசிரியரான ஸ்ரீ அரவிந்தர் பெரும்தேசபக்தர் என்பதையும், உயர்ந்த ஞானி என்பதையும் நம்மவர் அறிவாராதலின் அவருடைய எழுத்தைப்பற்றி நாம் மதிப்பிடுவது நகைப்பிற்கிடமாகும். இதனை தமிழில் திறம்பட மொழிபெயர்த்த ஸ்ரீ கோதண்டராமனவர்களை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

**சிந்தனையும் மின்னொளியும்.**

(ஆசிரியர் அரவிந்தர். மொழிப்பெயர்ப்பாசிரியர் பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல். விலை அணா-10. நவயுகப் பிர

சுராலயம், ஜார்ஜ்டவுன், சென்னை) மதிப்பிடமுடியாத மாணிக்க மணிகள் போன்றுள்ள, இந்நூலின் திருமொழிகளுக்கு யாம் எவ்விதம் மதிப்பிடமுடியும்? இந்நூலிற் கூறப்பட்டுள்ள திருமொழிகளை நாம் அனுபவத்திற் கொண்டுவந்தால், அதுவே இந்நூலிற்குரிய சிறந்த மதிப்புரை என்று கூறிவிடலாம். அரவிந்தரின் கருத்துக்கள், வேதமொழிகளென்றே கூறுதற்குரியது தமிழ் மக்களுக்கு புதியபுதிய விருந்துகளை அளித்துவரும் மொழிபெயர்ப்பாளர் ஸ்ரீ பி. கோதண்டராமனவர்களுக்கும், நவயுகப்பிரசுராலயத்தாருக்கும் யாம் பெரிதும் நன்றி பாராட்டுகிறோம்.

**பேய்ப்பித்து:** (ஆசிரியர் ஏ. எஸ். பி ஐயர், M.A., I.C.S. மொழிபெயர்ப்பாளர், தி. அ. சாமிநாதய்யர் விலை அணா-10.) சுவாரஸ்யமான கதை. நல்ல தமிழ்நடை. பேய்ச்சடங்குகளைப் பற்றி விபரமாகக் கூறப்பட்டுள்ளது. இந்நூலைப் படிக்கும்போது பிரமிப்பும் அதிசயமும் உண்டாகின்றன. இத்தகைய சம்பவங்கள் நம் நாட்டில் நீண்டகாலம் நடைபெற்றுவந்தமையையறிவதற்கு இக்கதை சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

**பிடில் வித்தையும் வாசிக்கும் முறையும்.** (ஆசிரியர்: வி சுப்பிரமணிய அய்யர், பி. ஏ., எட்வர்டு எலியட்ஸ் ரோடு, 46, மயிலாப்பூர்.) விலை அணா-[illegible]. பிடில் வாசிக்கக் கற்றுக்கொள்பவர்கள் இந்நூலை ஒருமுறை படித்துக்கொள்ளுதல் நலம்; அதற்கு யோகமாகப் போட்டோ படங்களும் காட்டப்பட்டுள்ளன. இந்நூலாசிரியரின் முயற்சியை, பிடில் வாசிக்கும் மாணவர்கள் ஆதரவளிப்பார்களாக.

